Registered as a Newspaper

புதன் பொய்கை

# உதயன்

விலை ரூ. 50

பக்கங்கள் 16

சுடர் : 38
கதிர் : 32

புதன்கிழமை 28 டிசெம்பர் 2022

மார்கழி 13 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2053

# 31 அரசியல் கைதிகளையும் உடன் விடுவிக்கவேண்டும்!

## எதிர்க்கட்சித் தலைவர் வலியுறுத்து



**கொழும்பு, டிசெம்பர் 28**

**சிறைச்சாலைகளில் தற்போது உள்ள 31 தமிழ் அரசியல் கைதிகளும் விரைவில் விடு தலை செய்யப்படவேண்டும் - இவ்வாறு எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வலி யுறுத்தினார்.**

»15

## ஐ.தே.கவுடன் கூட்டு: சின்னம் 'மொட்டு'

### பஸிலிடம் வலியுறுத்து

கொழும்பு, டிசெ. 28
'உள்ளூராட்சி சபைத் தேர்தல் இடம்பெற்றால் அதில் பொதுஜன பெரமுனவும் ஐக்கிய தேசியக் கட்சியும் இணைந்து போட்டியிட்டால்

»15

*மின் கட்டமைப்புச் சீரமைப்பு*

## வழிபாட்டுத் தலங்களுக்கு இலவசமாக சூரிய அலகு

கொழும்பு, டிசெ. 28
இலங்கையின் மின்கட்டமைப்புச் சீரமைப்புத் திட்டத்தின் கீழ், மத வழிபாட்டுத் தலங்களுக்கு இலவசமாக சூரிய சக்தி அலகுகள்

»15

## இறால் பிடிக்கச் சென்ற கடற்றொழிலாளி இறப்பு

முல்லைத்தீவு, டிசெ. 28
முல்லைத்தீவு, மாத்தளன் ஏரிப்பகுதியில் இறால் பிடிப்பதற்காகச் சென்ற கடற்றொழிலாளி யொருவர் நேற்றுமுன்தினம் சடலமாக

»15

## விபத்தில் காயமடைந்தவர் சிகிச்சை பயனின்றிப் பலி!

யாழ்ப்பாணம், டிசெ. 28
விபத்தில் படுகாயமடைந்து சிகிச்சை பெற்று வந்த வயோதிபர் ஒருவர், 50 நாள்களின் பின்னர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார்.

»15

## வடக்கு – கிழக்கை முன்னிலைப்படுத்தி அரசியல் நடவடிக்கைகள் இடம்பெறும்!

### வாசுதேவ நாணயக்கார தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 28
இலங்கை மேலவை கூட்டணி தலைமையிலான புதிய அரசியல் கூட்டணி எதிர்வரும் மாதம் முதல் வாரத்தில் உத்தியோகபூர்வமாக

»15

*கனடாவுக்குப் படகில்சென்று*

## வியட்நாமில் மீட்கப்பட்டோரில் 151 பேர் இன்று இலங்கைக்கு

கொழும்பு, டிசெ. 28
கனடாவுக்கு படகில் சட்டவிரோதமாகச் சென்று, கடலில் தத்தளித்த நிலையில் காப் பாற்றப்பட்டு வியட்நாம் தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கையைச் சேர்ந்த 303 பேரில் 151 பேர் இன்று

»15

*விளையாட்டு, இளைஞர் விவகார;*

## அமைச்சின் செயலாளராக யாழ். மாவட்டச் செயலர்!

*ஜனவரி முதல் நியமனம்*

கொழும்பு, டிசெ. 28
யாழ்ப்பாணம் மாவட்டச் செயலாளராகப் பணி யாற்றிவரும் கணபதிப்பிள்ளை மகேசன், விளை யாட்டு மற்றும் இளைஞர்கள் விவகார அமைச் சின் செயலாளராக ஜனாதிபதி ரணில்

»15

## மாவை சேனாதிராசாவின் தலைமையில் தமிழ்த் தரப்புகள் ஒன்றிணையவேண்டும்

### க.வி.விக்னேஸ்வரன் வலியுறுத்து

யாழ்ப்பாணம், டிசெ. 28
தற்போதைய நிலையில் மாவை சேனாதிராசா வைத் தலைவராகக் கொண்டு, தமிழ்த் தரப்புகள் ஒன்றிணையவேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார். ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலில் இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது: - தமிழ்த் தரப்புகளுக்குள் பிரிவினை

»15







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேப்பாபிலவு பூர்வீக நிலம் இராணுவமே வெளியேறு!

## மக்கள் நேற்றுப் போராட்டம்

முல்லைத்தீவு, டிசெ. 28
முல்லைத்தீவு, கேப்பாபிலவில் இராணுவத்தினர் அபகரித்துள்ள காணிகளை விடுவிக்கவேண்டும் என்று வலியுறுத்தி காணிகளுக்குச் சொந்தமான மக்கள் நேற்று செவ்வாய்க்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.




கேப்பாப்பிலவு இராணுவ முகாமின் பிரதான வாயிலின் முன்பாக இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.
'எமது நிலம் எமக்குவேண்டும் இராணுவமே வெளியேறு', 'எங்கள் சொந்தக் காணிகளுக்குள் இராணுவ முகாம் வேண்டாம்', 'கேப்பாப்பிலவு எமது பூர்வீக கிராமம்', 'போர் முடிந்து 14 ஆண்டுகள்; மக்கள் இன்னமும் அகதிகளாக வீதியில்' உள்ளிட்ட பதாகைகளை ஏந்தியவாறு கோஷமிட்டு மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.
தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன், புதுக்குடியிருப்பு பிரதேசசபை உறுப்பினர்கள் உள்ளிட்டோரும் இந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றனர். (ச-246,19)

# இந்தியக் கடன் உதவியில் தேர்தலுக்கான விரல் பூச்சு

கொழும்பு, டிசெ.26
அத்தியாவசிய பொருள்களைக் கொள்வனவு செய்வதற்காக இந்தியா வழங்கும் கடன் வசதியின் கீழ், உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு தேவையான விரல் பூச்சு (மை) இறக்குமதி செய்வது தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழு கவனம் செலுத்தியுள்ளது. அதற்கு முன்னர் தற்போது ஆணைக்குழு வசம் உள்ள மை காலாவதியாகிவிட்டதா? என்பது பரிசோதிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
இதுதொடர்பாக ஏற்கனவே அரச இரசாயன பகுப்பாய்வுத் திணைக்களத்திடம் அறிக்கை கோரப்பட்டுள்ளது என்று தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. இதுதொடர்பில் தேர்தல் ஆணைக்குழு தலைவர் நிமல் புஞ்சிஹேவா கொழும்பு ஊடகம் ஒன்றுக்குத் தெரிவித்துள்ளதாவது:
தற்போதுள்ள மை கையிருப்பு தேர்தலை நடத்த போதுமானதாக இல்லாததால், கட்டாயமாக இறக்குமதி செய்யவேண்டும். விரல் பூச்சு இறக்குமதி செய்யவேண்டிய அவசியமில்லை எனத் தேர்தல்கள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவரும் தற்போதைய எல்லை நிர்ணய குழுவின் தலைவருமான மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.
முந்தைய ஆண்டுகளில் அவை இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டாலும், கடைசியாக 2020 ஆம் ஆண்டு தேர்தலுக்காக விரல் பூச்சுகள், உள்ளூர் உற்பத்தியாளர்களிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டன. அவை காலாவதியாவிட்டதா? என்பது பரிசோதிக்கப்படும் - என்றார். (எ-இ)

# தினேஸ் சாப்டர் தற்கொலையா?

## விசாரணையில் திருப்பம்

கொழும்பு, டிசெ. 28
பிரபல தொழிலதிபர் தினேஸ் சாப்டர் தற்கொலை செய்துகொண்டாரா? என்ற கோணத்தில் சி.ஐ.டியினர் கவனம் செலுத்தியுள்ளனர் என பொலிஸ் வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.
தினேஸ் சாப்டர் மரணம் தொடர்பில் கிடைத்துவரும் தகவல்கள் மற்றும் ஆதாரங்களின் அடிப்படையில் விசாரணையில் திருப்பம் ஏற்பட்டுள்ளது. சாப்டரின் உயிரிழப்பின்போது அவரது கழுத்தில் கட்டப்பட்ட வயர் மற்றும் கைகள் கட்டப் பயன்படுத்தப்பட்ட கேபிள் இணைப்பு வயர்கள் அவரது வீட்டில் பொலிஸார் கண்டெடுத்துள்ளனர்.
அதேவேளை சம்பவத்துக்கு சில நாள்களுக்கு முன்பு சாப்டர் தனது மாமியாருக்கு எழுதிய கடிதம் மீட்கப்பட்டுள்ளது. அதில் "இவ்வளவு நல்ல மகளாக எனது மனைவியை வளர்த்ததற்கு மிக்க நன்றி" என்று அவர் மாமியாருக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்
சாப்டர் தான் வசித்து வந்த ப்ளவர் வீதியிலுள்ள வீட்டை விற்பதற்கு நாளிதழில் விளம்பரம் பிரசுரித்தமையும் விசாரணையில் தெரியவந்துள்ளது. பல்வேறு வணிக முயற்சிகளில் மில்லியன் கணக்கான ரூபாவை முதலீடு செய்த பின்னர் பணத்தை திரும்பப் பெறத் தவறியதால் அவர் பல இழப்புகளைச் சந்தித்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.
இதனடிப்படையில் சாப்டர் தற்கொலை செய்து கொண்டாரா? என்று விசாரணை அதிகாரிகள் சந்தேகிக்கும் நிலையில் அது உறுதிப்படுத்தப்படவில்லை. சாப்டரின் பிரேத பரிசோதனையின் படி, வயர் கேபிளால் கழுத்தை நெரிக்கப்பட்டதாலேயே இறப்பு சம்பவித்ததாகவே தெரிவிக்கப்படுகிறது எனக் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கூறுகின்றனர். (ச-இ)

# அனலைதீவு வீதி சேதம் மக்கள் பெரும் அவதி

யாழ்ப்பாணம், டிசெ. 28
அனலைதீவு பிரதான வீதி மிக மோசமாக சேதமடைந்து காணப்படுவதால் பெரும் அசௌகரியங்களுக்கு மத்தியில் பயணிக்கவேண்டியுள்ளது என மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.
அவர்கள் மேலும் தெரிவித்துள்ளதாவது:
அனலைதீவு இறங்குதுறை தொடக்கம் தெற்கு முருகன் கோவில் வரையான மற்றும் வாகனங்கள் செல்லும் பிரதான வீதிகள் பல இடங்களில் சேதமடைந்து குண்டும் குழியுமாகக் காணப்படுகின்றன.



இந்தப் பகுதி மக்களுக்கு ஒரேயொரு அரச பேருந்து மாத்திரமே சேவையில் ஈடுபடுகிறது. வீதியின் மோசமான சேதமடைவால் இந்தப் பேருந்து அடிக்கடி பழுதடைவதுடன் பொதுப் போக்குவரத்தும் தடைப்படுகிறது.
மழைகாலங்களில் இந்த வீதிகளின் குழிகளில் வெள்ளம் தேங்கி நிற்பதால் வீதியால் பயணிக்க முடியாத நிலை ஏற்படுகிறது. எனவே ஊர்காவற்றுறை பிரதேச சபைக்கு சொந்தமான இந்த வீதிகளைப் புனரமைத்து மக்கள் போக்குவரத்தை சீர் செய்ய உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என அவர்கள் மேலும் தெரிவித்தனர். (ச-9)

# வாக்குச்சீட்டைப் பொறுத்தே அச்சிடும் செலவு தீர்மானம்

கொழும்பு, டிசெ.28
உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான அச்சிடும் செலவுகள் வாக்குச்சீட்டின் அளவைப்பொறுத்தே தீர்மானிக்கப்படும் என அச்சகத் திணைக்களம் தெரிவித்துள்ளது.



இது தொடர்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
ஜனாதிபதித் தேர்தல் மற்றும் சர்வஜன வாக்கெடுப்பின்போது மாத்திரம் ஒரே அளவிலேயே வாக்குச்சீட்டு அச்சிடப்படும். ஏனைய அனைத்து சந்தர்ப்பங்களிலும் வாக்குச் சீட்டின் அளவு குறைக்கப்படும். வாக்குச் சீட்டுகளை அச்சிட எடுக்கும் நேரத்தைக் கருத்தில் கொண்டு, அதற்கான செலவுகள் திருத்தப்படும்.
தேர்தல் தினத்துடன் ஒப்பிடும் போது வாக்குச் சீட்டுகளை அச்சிடுவதற்கான கால அவகாசம் மிகக் குறைவாக இருந்தால் செலவுகள் அதிகரிக்கும். உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான முதற்கட்ட பணிகள் அரசாங்க அச்சகத்தால் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
தேர்தல் தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் எதிர்வரும் வாரத்தில் கிடைக்கப்பெறும் பட்சத்தில் மேற்கொண்டு பணிகள் முன்னெடுக்கப்படும் - என்றது. (எ-14-இ)

# சாரதிகளின் தவறுகளுக்கு புதிய முறையில் தண்டனை

கொழும்பு, டிசெ. 28
சாரதி செய்யும் தவறுகளுக்கு புள்ளிகளைக் குறைத்து அதனுடன் தொடர்புடைய தண்டனைகளை விதிக்கும் புதிய முறைமையை நடைமுறைக்குக்கொண்டுவரத் திட்டமிடப்பட்டுள்ளது என்று மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகம் நிஷாந்த விரசிங்க தெரிவித்துள்ளார். இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
வீதியில் செல்லும் சாரதிகள் வாகனத்தைச் செலுத்தும்போது செய்யும் தவறுகளுக்குப் புதிய முறைமையின் கீழ் தகுதி புள்ளிகள் வழங்கப்படவுள்ளன. இந்த நிலையில் இது தொடர்பான அபராதங்களை விதிக்கும் முறை அறிமுகப்படுத்தப்படும். அத்துடன் இது தொடர்பான அடிப்படை முறைமை தயாரிக்கப்பட்டுள்ளது.
மேலும் எதிர்காலத்தில் இது அமைச்சரவைக்கு அனுப்பிவைக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது - என்றார். (எ-14,இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரணில், ராஜபக்சக்கள் முடிவு தேர்தல் ஊடாக ஆரம்பிக்கும்

### லக்ஷ்மன் கிரியெல்ல ஆருடம்



கொழும்பு, டிசெ. 28

தேர்தலைப் பிற்போட அரசாங்கம் தேர்தல்கள் ஆணைக்குழு விடம் மன்றாடுகின்றது. எனினும் உள்ளூராட்சிமன்றத் தேர்தல் ஊடாக ரணில், ராஜபக்சக்களின் முடிவு ஆரம்பமாகும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

கண்டியில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகவிய லாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையில் மேற்கண் டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

2023 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் அரச செலவுகளுக் காக 7 ஆயிரத்து 900 பில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ள நிலையில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு 10 பில்லியன் ரூபாவை ஏன் செலவு செய்ய முடியாது. 2023 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 20ஆம் திகதிக்கு முன்னர் உள்ளூராட்சி மன்றத் தேர் தல் நடத்தப்படும் என பொறுமையு டன் பார்த்துக் கொண்டிருக்கிறோம். உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர் பில் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த இரண்டு ரிட் மனுக்கள் எதிர்வ ரும் மாதம் 18ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

நீதிமன்றத்தின் மீது முழுமையான நம்பிக்கை எமக்கு உள்ளது. வாக்கு ரிமை என்பது மக்களின் அடிப்படை உரிமைகளில் ஒன்று. ஆகவே தேர் தல் உரிய காலத்தில் நடத்தப்பட வேண்டும் என உயர்நீதிமன்றம் 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டு காலப்ப குதியில் தீர்ப்பளித்துள்ளது.

நகர மற்றும் பிரதேசசபை சட்டத்தின் பிரகாரம் உள்ளூராட்சி மன்றத் தேர் தலை எதிர்வரும் ஆண்டு பெப்ரவரி மாதம் 20ஆம் திகதி நடத்துவது கட் டாயமாகும். தேர்தலை பிற்போடு வதற்கான உரிய காரணம் எதுவும் அரசாங்கத்திடம் கிடையாது. உள்ளூ ராட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்பு மனு தாக்கல் இந்தமாத இறுதியில் அறிவிக்கப்படும் எனத் தேசிய தேர்தல் கள் ஆணைக்குழுவின் தலைவர் கடந்த மாதம் தெரிவித்தார். ஆனால் தற்போது அடுத்த மாதம் முதல் வாரத் தில் வேட்புமனு தாக்கல் தொடர்பான உத்தியோகப்பூர்வமான தீர்மானம் அறிவிக்கப்படும் எனக் குறிப்பிட்டுள் ளார். இந்த மாத இறுதி பகுதி, அடுத் தமாதம் முதல் வாரம் வரை பிற்போ டப்பட்டுள்ளமைக்கான காரணத்தை இதுவரை ஆணைக்குழு அறிவிக்க வில்லை - என்றார். (எ-14,இ)

## தாய், குழந்தை சுகாதார சேவை வீழ்ச்சியுறும் அபாயம்

கொழும்பு, டிசெ. 28

ஜனவரி முதலாம் திகதி முதல் தாய் மற்றும் குழந்தைகளுக்கான சுகாதார சேவைகள் வீழ்ச்சியடையும் அபாயம் காணப்படுகின் றது என்று அரச குடும்ப சுகாதார சேவை உத்தி யோகத்தர்களின் சங்கம் தெரிவித்துள்ளது.

குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர்க ளின் பற்றாக்குறை நிலவும் வேளையில் 60 வயதைக் கடந்தும் உத்தியோகத்தர்கள் ஓய்வு பெறுவதால் இந்த நிலைமை மோசமாக உள்ளது என்று சங்கத்தின் தலைவர் தேவிகா கொடித்துவக்கு தெரிவித்தார். (எ-14,இ)

## 9,300 குழந்தைகளுக்கு போஷாக்குக் குறைவு

கொழும்பு, டிசெ. 28

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக் கடி நிலை காரணமாக குழந்தைகள் மற்றும் சிறுவர்கள் பலர் போஷாக்குக் குறைப்பாட் டால் பாதிக்கப்பட்டுள்ளனர். கொழும்பு மாவட்டத்தில் 5 வயதுக்குட்பட்ட சுமார் 9 ஆயிரத்து 300 குழந்தைகள் போஷாக்குக் குறைபாட்டால் பாதிக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு மாவட்டச் செயலகத்தில் அண் மையில் நடைபெற்ற மாவட்ட ஒருங்கி ணைப்புக் குழுக் கூட்டத்தில் இந்தத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;- கொழும்பு பிரதேசசெயலகப் பிரிவில் ஆயி ரத்து 949 சிறுவர்கள் போஷாக்குக் குறை பாடுள்ளவர்களாக உள்ளனர். கொழும்பு பிரதேசசெயலகப் பிரிவிலேயே அதிகளவான சிறுவர்கள் போஷாக்குக் குறைபாட்டால் பாதிக்கப்பட்டுள்ளனர். அத்துடன் கொழும் பில் மட்டும் ஆயிரத்து 457 கர்ப்பிணித் தாய்மார்கள் போஷாக்குக் குறைபாட்டால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தற்போதைய உணவுப் பற்றாக்குறையால் கடுமையான ஊட்டச்சத்துக் குறைபாடு படிப் படியாக உருவாகும் என்றும், சுமார் இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு இது குழந்தை களில் வளர்ச்சிக் குறைபாட்டை ஏற்படுத்தும் என்றும் சுகாதாரத்துறை சுட்டிக்காட்டியுள் ளது. இந்த நிலையில் போஷாக்கு நிலை யைக் குறைப்பதற்காக இனங்காணப்பட்ட குடும்பங்களுக்கு போஷாக்குப் பைகளை வழங்குதல் உள்ளிட்ட பல வேலைத்திட்டங் கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. என்று தெரிவிக்கப்பட்டது. (எ-14,இ)

## மாணவருக்கு மாவா சந்தேகநபர் கைது

கொழும்பு, டிசெ. 28

பாடசாலைகளின் மாணவர்களை இலக்கு வைத்து மாவா போதைப்பொருளை விற்பனை செய்ய முற்பட்ட குற்றச்சாட்டில் 7ஆயிரத்து 200 மில்லிகிராம் போதைப்பொருளுடன் ஒரு வர் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டுள் ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

இரத்மலானை மற்றும் கல்கிஸை பிரதேசங்க ளில் உள்ள உயர்தரப் பாடசாலைளை அண் மித்த பகுதியில் சந்தேகநபர் கைதுசெய்யப்பட் டார். சந்தேகநபர் கொழும்பிலிருந்து மாவா போதைப்பொருளை எடுத்துவந்து பொதி செய்து மாணவர்களுக்கு விநியோகிக்க முற்பட்டுள் ளார் என விசாரணையில் தெரியவந்துள்ளது என பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)

## எரிபொருள்களின் நுகர்வு வருட இறுதியில் குறைவு

### *பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவிப்பு*

கொழும்பு, டிசெ. 28

நாட்டில் எரிபொருள் தேவை இந்தாண்டு ஜனவரி மாதத்து டன் ஒப்பிடுகையில் வருட இறுதியில் 50 வீதத்தால் குறைவ டைந்துள்ளது என இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

பொருளாதார நெருக்கடியால் எரிபொருள் நுகர்வு பின்ன டைவு, கியூஆர் நடைமுறை, எரிபொருள் இருப்பை நுகர் வோர் சேமிப்பதில் செயற்படாமை ஆகியவற்றில் எரிபொருள் தேவை குறைந்துள்ளது.

வருடத்தின் முதற்பாதியில் மாதம் ஒன்றுக்கு சுமார் நான் காயிரம் மெற்றிக் தொன் பெற்றோல் மற்றும் டீசல் தேவை காணப்பட்டது. ஆயினும் தற்போது அது 2 ஆயிரம் மெற்றிக் தொன்னாக வீழ்ச்சி கண்டுள்ளது.

கடந்த மார்ச் மற்றும் ஜூலை மாதங்களுக்கு இடையில் தின சரி 6 ஆயிரத்து 400 மெற்றிக் தொன்னில் காணப்பட்ட டீசல் நுகர்வு தற்போது 2 ஆயிரத்து 200 ஆகக் குறைந்துள்ளது. பெற்றோல் நுகர்வும் 3ஆயிரத்து 700 இலிருந்து ஆயிரத்து 200மெற்றிக் தொன்னாகக் குறைந்துள்ளது என பெற்றோ லிய சட்டபூர்வ கூட்டுத்தாபனம் சுட்டிக்காட்டியது. (ச-இ)

## புகையிலை, மதுப்பாவனை தினந்தோறும் 100 பேர் சாவு

கொழும்பு, டிசெ. 28

புகையிலை மற்றும் மதுபானப் பாவனையால் இலங்கை யில் நாளொன்றுக்கு 100 பேர் உயிரிழக்கின்றனர் என புகையிலை மற்றும் மதுபானம் தொடர்பான தேசிய அதி காரசபை தகவல் வெளியிட்டுள்ளது.

அதிகார சபையின் தலைவர் பேராசிரியர் கலாநிதி சமாதி ராஜபக்ச தெரிவித்துள்ளதாவது:

புகைபிடித்தல் மற்றும் புகையிலை பாவனையால் வருடாந் தம் 40 ஆயிரம் பேர் உயிரிழக்கின்றனர். இந்தப் பாவ னையாளர்களால் அவர்களது மனைவியர், பெற்றோர், பிள்ளைகள் பாதிக்கப்படுகின்றனர்.

2020 ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்டு 2021 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் முன்வைக்கப்பட்ட புகையிலை வரிச்சூத் திரத்தை தற்போது நடைமுறைப்படுத்தினால் இறப்பு எண் ணிக்கையை குறைக்க முடியும் - என்றார். (ச-இ)

## தகுதியுடையோருக்கு வேட்பு மனு வழங்குக!

### வலியுறுத்துகிறது பவ்ரல்



கொழும்பு, டிசெ. 28

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் சிறந்த தரப்பினருக்கு மாத்திரம் வேட்பு மனுக்களை வழங்குமாறு சகல அரசியல் கட்சிகளிடம் வலி யுறுத்தவுள்ளோம் என்று பவ்ரல் அமைப்பு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் பவ்ரல் அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாரச்சி தெரிவித் துள்ளதாவது:-

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை எதிர்வரும் ஆண்டு பெப்ரவரி மாதம் 20ஆம் திகதிக்கு முன்னர் நடத்த தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு உரிய நடவடிக் கைகளை முன்னெடுத்துள்ளமை வரவேற்கத்தக் கது. தேர்தலைப் பிற்போட அரசாங்கம் ஏதேனும் வழிமுறைகளை முன்னெடுத்தால் நீதிமன்றத்தை நாடுவோம் என்பதில் எவ்வித மாற்றமுமில்லை. ஆகவே நடைமுறையில் உள்ள தேர்தல் முறைக்கு அமைய உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவது சிறந்ததாக அமையும்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிட சிறந்த தரப்பினருக்கு மாத்திரம் வேட்புமனுக்களை வழங் குமாறு அனைத்து அரசியல் கட்சிகளிடமும் வலியு றுத்தவுள்ளோம். அரசியல் கட்டமைப்பு தொடர்பில் மக்கள் மத்தியில் சிறந்த நிலைப்பாடு கிடையாது. மக்களின் நம்பிக்கையை வெற்றிகொள்ளும் வகை யில் அரசியல் கட்டமைப்பு மாற்றியமைக்கப்பட வேண்டும்.

ஊழல்வாதிகளைப் புறக்கணிக்கும் அதிகாரம் நாட்டு மக்களுக்கு வாக்குரிமை ஊடாக வழங்கப்பட்டுள் ளது. அந்த அதிகாரத்தை மக்கள் முறையாக பயன்ப டுத்த வேண்டும். தவறான தரப்பினரைத் தெரிவு செய் தால் அதன் விளைவை அடுத்த தேர்தல் இடம்பெறும் வரை எதிர்கொள்ள நேரிடும். மக்களாணைக்கு முரணாக செயற்படும் அரசியல்வாதிகளை மீளழைக் கும் அதிகாரம் தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு வுக்கு உரித்தாக்கப்பட வேண்டும் என்பதை தேர்தல் முறைமை தொடர்பான குழுவிடம் வலியுறுத்தியுள் ளோம் - என்றார். (எ-14,இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதித் தேர்தலுக்காகவே உள்ளாட்சி தேர்தல் இழுத்தடிப்பு

## ஐக்கிய மக்கள் சக்தி சுட்டிக்காட்டு

கொழும்பு, டிசெ. 28

உள்ளூராட்சிமன்றத் தேர்தல் முடிவுகள் ஜனாதிபதித் தேர்தலிலும் தாக்கம் செலுத்தும் என்பதற்காகவே அரசாங்கம் உள்ளூராட்சித் தேர்தலை காலம் தாழ்த்த முயற்சித்துக் கொண்டிருக்கின்றது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் அசோக அபேசிங்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

தற்போதைய ஜனாதிபதி, அடுத்த ஜனாதிபதித் தேர்தலிலும் வேட்பாளராகப் போட்டியிடுவாரானால் ஒரு வருடத்துக்கு முன்னரே அவரால் தேர்தலை நடத்தமுடியும். அதாவது 2023 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்துக்கு முன்னர் தேர்தலை நடத்த முடியும். அவ்வாறு தேர்தலை நடத்துவதாயின் அதற்கு இன்னும் சில மாதங்களே காணப்படுகின்றன.

வேறு எந்தவொரு தேர்தலையும் நடத்தாமல் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கே ரணில் முயற்சிக்கின்றார். உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 4 ஆயிரம் ஆகக் குறைக்கப்படும் என்று கூறிக் கொண்டிருக்கின்றார். அதற்குக் காரணம் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் ஜனாதிபதி ரணிலுக்கு வெற்றியளிக்கும் தேர்தலாக அமையாது. ஐக்கிய தேசியக் கட்சியும், சிறிலங்கா பொதுஜன பெரமுனவும் ஒன்றிணைந்து தேர்தலில் போட்டியிட்டால் நிச்சயம் வெற்றிபெற முடியாது. அவ்வாறான முடிவுகள் அடுத்த ஜனாதிபதித் தேர்தலிலும் தாக்கம் செலுத்தும். அதனால் உள்ளூராட்சி மன்றத் தேர்தலைக் காலம் தாழ்த்துவதற்கான முயற்சிகளில் அரசாங்கம் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறது- என்றார். (எ-14,இ)

# நாட்டை முன்னேற்றும் திட்டம் ஜே.வி.பியிடம் எதுவுமில்லை

## மஹிந்தானந்த எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 28

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் ராஜபக்சக்கள் ஆகியோரை விமர்சிப்பதைத் தவிர நாட்டை முன்னேற்றும் கொள்கைத் திட்டங்கள் எதுவும் மக்கள் விடுதலை முன்னணியினரிடம் கிடையாது என்று நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

நாவலப்பிட்டிப் பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

பல்வேறு காரணிகளால் நாடு வங்குரோத்து நிலை அடைந்துள்ளது. எமது அரசாங்கம் சிறந்த நோக்கத்துடன் எடுத்த ஒருசில தீர்மானங்கள் பொருளாதார நெருக்கடியைத் தீவிரப்படுத்தியுள்ளன.

நாட்டின் எதிர்காலத்தை கருத்தில்கொண்டு ஐக்கிய தேசியக் கட்சியுடன் ஒன்றிணைந்துள்ளோம்.

பொருளாதார நெருக்கடிக்கு தம்மால் தீர்வு காணமுடியும் எனத் தற்போது வீர வசனம் பேசும் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் நெருக்கடியான சூழ்நிலையில் அரசாங்கத்தை ஏற்கவில்லை. இக்கட்டான சூழ்நிலையில் சவால்களை ஏற்பது தான் சிறந்த தலைமைத்துவம்.

ஒரு கூட்டத்தை மக்கள் விடுதலை முன்னிணியினர் நடத்தினால் அதில் ராஜபக்சக்களை விமர்சிப்பதும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உட்பட ஏனைய அரசியல் கட்சிகளை விமர்சிப்பதுமே பிரதானமாகக் காணப்படும். விமர்சனங்களை தவிர பொருளாதாரத்தை முன்னேற்றும் எந்த வித கொள்கைத் திட்டமும் மக்கள் விடுதலை முன்னணியினரிடம் கிடையாது. விமர்சனங்களால் மாத்திரம் நாட்டை முன்னேற்ற முடியாது. மக்கள் விடுதலை முன்னணியினருக்கு வாக்களிக்கும் அளவுக்கு நாட்டு மக்கள் முட்டாள்கள் அல்லர். எதிர்வரும் காலங்களில் இடம்பெறவுள்ள தேர்தல்களில் ஆட்சியை நாங்கள் நிச்சயம் கைப்பற்றுவோம். உள்ளூராட்சி மன்றத் தேர்தலைக் கண்டு அஞ்ச வேண்டிய தேவை எமக்கு இல்லை. கூட்டணியாகத் தேர்தலில் போட்டியிடுவோம்- என்றார். (எ-14,இ)

# 4 வருடங்களில் 1,955 பேர் நாடுகடத்தல்

கொழும்பு, டிசெ. 28

கடந்த 4 வருடங்களில் குற்றங்கள் மற்றும் ஊழல் குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் ஆயிரத்து 955 வெளிநாட்டவர் இலங்கையிலிருந்து நாடு கடத்தப்பட்டுள்ளனர்.

குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம் வெளியிட்டுள்ள செயற்றிறன் மீளாய்வு அறிக்கையில் இந்த விவரம் குறிப்பிடப்பட்டுள்ளது.

2018ஆம் ஆண்டு 678 வெளிநாட்டவர்களும் 2019ஆம் ஆண்டில் 898 பேரும், 2020ஆம் ஆண்டில் 249 பேரும், கடந்த ஆண்டு 130 வெளிநாட்டவர்களும் நாடு கடத்தப்பட்டனர். நாடு கடத்தப்பட்டவர்களில் அதிகமானோர் இந்தியர்கள் எனக் கூறப்படுகிறது. (ச-இ)

# மின் கட்டண உயர்வு மனித உரிமை மீறல்

## இந்த வாரம் விசாரணை!

கொழும்பு, டிசெ. 28

மின்கட்டணத்தை அதிகரிக்க அரசாங்கம் மேற்கொண்டுள்ள தீர்மானம் தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழுவால் விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஏற்றுக்கொள்ள முடியாத வகையில் மின் கட்டணம் அதிகரித்துள்ளதால் மனித உரிமை மீறப்பட்டுள்ளதா? இல்லையா? என்பது தொடர்பில் ஆராய்வதே இதன்நோக்கம் என அதன் ஆணையாளர் நிமல் கருணாசிறி தெரிவித்தார்.

இந்த விசாரணையின்போது இலங்கை மின்சாசபை மற்றும் அதனுடன் தொடர்புடைய அதிகாரிகள் உரிய வகையில் கடமைகளை நிறைவேற்றியுள்ளனரா? என்பது தொடர்பில் கவனம்செலுத்தப்படவுள்ளது.

விசாரணைகள் இந்தவாரம் ஆரம்பிக்கப்பட்டுள்ளன, இது தொடர்பில் முழுமையான அறிக்கையை வெளியிட ஆணைக்குழு எதிர்பார்க்கிறது என மனித உரிமைகள் ஆணையாளர் நிமல் கருணாசிறி மேலும் தெரிவித்தார்.


இதேவேளை பொருளாதார நெருக்கடி காரணமாக மின்பாவனைப் பயன்பாட்டை மக்கள் குறைத்துள்ள சந்தர்ப்பத்தில் மின்கட்டணத்தை மீண்டும் அதிகரிப்பதானது நியாயமான விடயம் அல்ல என்று மக்கள் சபை கோரியுள்ளது.

மின்கட்டணம் மீண்டும் அதிகரிக்கப்படும் பட்சத்தில் பொதுமக்கள் மின் பாவனையை மேலும் குறைக்கக் கூடும். இதன்மூலம் இலங்கை மின்சார சபைக்கு நட்டமே ஏற்படக் கூடும் என மின் பாவனையாளர்கள் சங்கம் சுட்டியுள்ளது. (ச-இ)

# இரட்டைக் குடியுரிமைக்கு 5,401 பேர் விண்ணப்பம்

2021 ஆம் ஆண்டில் 5 ஆயிரத்து 401 பேர் இரட்டைக் குடியுரிமையைப் பெறுவதற்கான கோரிக்கைகளைச் சமர்ப்பித்துள்ளனர் என்று குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இவர்களில் ஆயிரத்து 621 பேர் அவுஸ்திரேலியாவிலிருந்தும், பிரித்தானியாவைச் சேர்ந்த 885 பேரும், அமெரிக்காவைச் சேர்ந்த 795 பேரும், கனடாவைச் சேர்ந்த 371 பேரும் இத்தாலி, சுவிட்சர்லாந்து, சுவீடன், நியூசிலாந்து, பிரான்ஸ் மற்றும் டென்மார்க் ஆகிய நாடுகள் உள்ளடங்கலாக 5 ஆயிரத்து 401 பேர் இரட்டைக் குடியுரிமை கோரி விண்ணப்பித்துள்ளனர். இவர்களுக்கு இரட்டைக் குடியுரிமை வழங்குவதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது. (எ-14,இ)



# நல்லாட்சியை விமர்சித்தோருக்கு தற்போது ஒரு பதவியும் இல்லை

## மைத்திரி சுட்டிக்காட்டு

கொழும்பு, டிசெ. 28

ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து நல்லாட்சி அரசாங்கத்தை அமைத்த போது என் மீது கடுமையாக விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன. அவ்வாறு என்னை விமர்சித்தவர்களே இன்று ஐக்கிய தேசியக் கட்சித் தலைவருடன் இணைந்து அனைத்துப் பதவிகளையும் இழந்து நிற்கின்றனர்.

இவ்வாறு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள சுதந்திரக் கட்சி தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நடைபெற்ற கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

தலைவரொருவர் இன்றி 3 நாள்கள் நாடு இருந்தது. அந்த 3 நாள்களில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒருவரைத் தலைவராகத் தெரிவு செய்திருக்கலாம். எனினும் ஆர்ப்பாட்டத்திலீடுபட்டவர்களே அதைத் தவறாக வழிநடத்தி விட்டனர்.

நான் ஜனாதிபதியானதன் பின்னர் ரணில் விக்கிரமசிங்க பிரதமராக நியமிக்கப்பட்டபோது, கட்சியை காட்டிக் கொடுத்துவிட்டேன் என்று தற்போது பொதுஜன பெரமுனவிலுள்ளோர் என்னை விமர்சித்தனர். ஆயினும் நான் அன்று ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டேன். ஆனால் பொதுஜன பெரமுன தற்போது ஜனாதிபதி, பிரதமர் ஆகிய இரண்டு பதவிகளையும் இழந்து நிற்கிறது. விரைவில் மக்களுக்கான ஏதேனுமொரு வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவேண்டும்- என்றார். (எ-14,இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# மீண்டும் பெருந்தொற்றா?

சீனாவில் மீண்டும் கொரோனா வைரஸின் தாண்டவம் ஆரம்பமாகியிருக்கின்றது. அங்குள்ள நிலைமைகள் தணிக்கை செய்யப்பட்டுள்ளபோதும், நாளாந்தத் தொற்று பல லட்சங்கள் என்றும், உயிரிழப்புக்கள் பல ஆயிரங்கள் என்றும் சர்வதேச ஊடகங்கள் வெளிப் படுத்துகின்றன. கடந்த இரண்டு ஆண்டுகளாக உல கத்தை முடக்கியிருந்த கொரோனா வைரஸ் தொற்று இந்த ஆண்டு ஆரம்பம் முதல் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது என்று நம்பப்பட்டது. கொரோனாத் தொற்றுக்கான தடுப்பூசிகள் ஏற்றப்பட்டு, உலக நாடுகளில் இறுக்கமாகக் கடைப்பிடிக்கப்பட்ட கொரோனாத் தடுப்பு நடவடிக்கைகளும் தளர்த்தப்பட்டன. உலகம் மெல்ல தன் வழமைக்குத் திரும்பிக் கொண்டிருக்கும் நிலையில், கொரோனா வைரஸ் மீண்டும் உயிர் பெற்றிருக்கின்றது.

சீனாவில் தோன்றியிருக்கும் கொரோனா வைரஸின் புதிய திரிபு மிக வேகமாக மக்களிடையே பரவுகின்றது. சீனாவின் பல பிரதான நகரங்கள் கொரோனா வைரஸ் தாக்கத்தால் முடங்கியிருக்கின்றன. இப்போது கொரோனா பாதுகாப்பு நடைமுறைகள் தளர்த்தப்பட்டுள்ள நிலையில், இந்தப் புதிய வைரஸ் திரிபு ஏனைய நாடுகளுக்கும் பரவலாம் என்று அஞ்சப்படுகின்றது. அந்த அச்சத்தை உறுதிப்படுத்துவது போன்று இலங்கையின் அயல்நாடான இந்தியாவில் புதிய திரிபுடன் சில தொற்றாளர்கள் கண்டறியப்பட்டிருக்கிறார்கள். இந்தியா மீண்டும் கொரோனாப் பாதுகாப்பு நடவடிக்கைகளை இறுக்கமாகப் பின்பற்ற ஆரம்பித்திருக்கின்றது.

இலங்கையைப் பொறுத்தவரையில் இனிமேல் கொரோனாப் பாதுகாப்பு நடவடிக்கைகளை முன்னெடுப்பது என்பது இயலாத காரியம். பெரும் பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் இலங்கை, கொரோனாத் தடுப்பு நடவடிக்கைகள் அனைத்தையும் கைவிட்டுள்ளது. பெரும் நிதிப்பற்றாக்குறையையும், மருந்துத்தட்டுப்பாட்டையும் எதிர்கொண்டுள்ள இலங்கையின் சுகாதாரத்துறை, கொரோனா வைரஸ் தொற்றைக் கண்டறியக்கூடிய பரிசோதனைகளை நடத்தும் நிலைமையில் இப்போது இல்லை. அதேநேரம், சுற்றுலாத்துறை வருமானத்தால் மட்டும் மூச்சு விட்டுக் கொண்டிருக்கும் இலங்கை, வெளிநாட்டுப் பயணக் கட்டுப்பாடுகளை விதிப்பதை இனிக் கனவிலும் நினைத்துப் பார்க்க முடியாது.

மறுபுறத்தில், மீண்டும் ஒரு கொரோனா வைரஸ் அலை நாட்டில் ஏற்பட்டால் அதனால் ஏற்படும் விளைவுகளை இலங்கையால் தாங்கிக்கொள்ளவே முடியாமல்தான் இருக்கும். சாதாரண தடிமனைக் கூட சமாளிக்க முடியாது தள்ளாடிக் கொண்டிருக்கும் இலங்கையின் சுகாதாரக் கட்டமைப்பு, இன்னொரு பெருந்தொற்றுப் பேரலை ஏற்பட்டால் முழுமையாக முடங்கும் என்பதில் சந்தேகம் இல்லை. அவ்வாறு நடக்குமானால் நாட்டு மக்கள் பெரும் அவலத்தைச் சந்திக்க நேரிடும்.

தற்போதைய நிலைமையில் இலங்கையில் கொரோனாத் தொற்று வேகமெடுப்பதற்கான அனைத்து நிலைமைகளும் ஏதுவாகவே இருக்கின்றன. அரசாங்கமும், சுகாதாரத்துறையும் தொற்று விவகாரத்தில் பட்டும்படாமலுமே இனிமேல் நடந்துகொள்ளக்கூடிய நிலையில், அண்மைய நாடுகளின் நிலைமையை அவதானித்து தாமாகவே தங்களைக் காத்துக்கொள்ள வேண்டிய நிலைமையில் இலங்கை மக்கள் உள்ளனர். அரசாங்கத்தினதும், சுகாதாரத்துறையினரினதும் மௌனத்தை பாதுகாப்பான நிலைமை என்று கருதிவிடாது, பொது மக்கள் தங்களால் இயலுமான சுகாதார நடைமுறைகளை உடனடியாகப் பின்பற்றுவதே புத்திசாலித்தனம்.

## நாளொரு நல்வார்த்தை

"தியாகியின் குருதியைவிட அறிஞனின் எழுது கோல் மை புனிதமானது"

– நபிகள் நாயகம்




# உள்நாட்டுக் கடனில் ரூ. 1000 பில். நிலுவை

## சம்பிக்க ரணவக்க தெரிவிப்பு



கொழும்பு, டிசெ. 28

இலங்கை அரசாங்கம் உள்நாட்டைச் சேர்ந்த நிறுவனங்களுக்கு சுமார் ஆயிரம் பில்லியன் ரூபாவுக்கு மேல் செலுத்த வேண்டிய தொகை நிலுவையில் உள்ளது என முன்னாள் அமைச்சர் சம்பிக்க ரணவக்க சுட்டிக் காட்டியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

மின்சார விநியோகஸ்தர்கள், ஒப்பந்தக்காரர்கள், அரசாங்க மற்றும் தனியார் வங்கிகளுக்கு பல மில்லியன் ரூபா கடனை அரசு செலுத்தவேண்டியுள்ளது.

மின்சார விநியோகஸ்தர்களுக்கு 100 பில்லியன் ரூபாவும், ஒப்பந்தக்காரர்களுக்கு 300 பில்லியன் ரூபாவும், வங்கித்துறைசார் நிறுவணங்களுக்கு 600 பில்லியன் ரூபாவும் செலுத்த வேண்டியுள்ளது.

ஹொட்டல்துறை மற்றும் ஏனைய துறைகளுக்கும் அரசாங்கம் பெருந்தொகை பணத்தை செலுத்த நேரிட்டுள்ளது என குறிப்பிட்டுள்ளார்.

(ச-இ)

# பெப்ரவரி முதலாம் திகதியிலிருந்து இணையவழியில் ஈ.ரி.எவ். தொகை

கொழும்பு, டிசெ. 28

28 லட்சம் பேர் அங்கத்துவம் வகிக்கும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் ( ஈ.ரி.எவ்) பங்களிப்புத் தொகை எதிர்வரும் பெப்ரவரி மாதம் முதலாம் திகதியிலிருந்து இணையவழி ஊடாக மட்டுமே பரிமாற்றப்படும் என்று இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது:-

ஊழியர்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் ஒரு நடவடிக்கையாக இதற்கான வர்த்தமானி அறிவித்தலை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வெளியிட்டுள்ளார்.

15 க்கும் மேற்பட்ட ஊழியர்கள் பணிபுரியும் நிறுவனங்களின் தொழில் வழங்குநர்கள் ஈ.ரி.எவ். பங்களிப்புத் தொகையையும் மாதாந்த அறிக்கைகளையும் இணையவழி மூலம் அனுப்ப வேண்டும்.

இந்த முறையின் ஊடாக தொழில் வழங்குநர்கள் மிகவும் இலகுவாக தமது ஊழியர்களின் பங்களிப்புத் தொகையை சேவை நிலையத்தில் இருந்த படியே பரிமாற்ற முடியும். ஊழியர்களும் தமது பங்களிப்புத் தொகை நிறுவனத்தால் செலுத்தப்பட்டுள்ளதா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள முடியும். இதற்காக எதிர்காலத்தில் குறுந்தகவல் சேவை ஒன்றை அறிமுகப்படுத்த எதிர்பார்க்கப்படுகின்றது - என்றார்.

(எ-14,இ)

**நாளை**

**29.12.2022**
வியாழக்கிழமை
மார்கழி 14

சுபநேரம் : 07.58 - 09.28
ராகுகாலம் : 01.58 - 03.28

கெர்ப்போட்டாரம்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



### பிள்ளையார் கதை

இலந்தையம் பதிவாசா உன்னருளை வேண்டியேழுவேழு
தினமாக விருப்புடனே நாம் நோற்றிருந்தோம்- கஜமுகனே
வேண்டாத இடர்களுடன் தடைகளையும் தானகற்றியெங்களையும்
ஏற்றிடுன் அடியவராய்க் கனிந்து

-முருகு

# நூதனமான முறையில் 2 கோடி ரூபா மோசடி!

கொழும்பு, டிசெ.28
சட்டவிரோதமான முறையில் வெளிநாட்டு தொலைபேசி அழைப்புகளை மேற்கொண்டு தொலைபேசி நிறுவனம் ஒன்றுக்கு இழப்பை ஏற்படுத்தும் வகையில் சுமார் 2 கோடி ரூபாவை மோசடி செய்தமை தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விரிவான விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

அந்த நிறுவனத்தின் முகாமையாளர் குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் செய்த முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

2022 ஆம் ஆண்டு ஏப்ரல் முதலாம் திகதி முதல் மே மாதம் 18 ஆம் திகதி வரையான காலப் பகுதியில் இந்த நிறுவனம் ஒன்றின் சிம்மை பாவித்து சட்டவிரோதமான முறையில் வெளிநாட்டு தொலைபேசி அழைப்புகளைப் பெற்று 53 ஆயிரத்து 983 அமெரிக்க டொலர் மோசடி செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பாக குற்றப்புலனாய்வுத் திணைக்களம் கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றில் அறிக்கை சமர்ப்பித்துள்ளது.

(எ-இ)

# இரு மாகாணங்களுக்கு செயலாளர்கள் நியமனம்

கொழும்பு, டிசெ.28
இரண்டு மாகாணங்களுக்குப் புதிய செயலாளர்களை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நியமித்துள்ளார் என்று ஜனாதிபதி அலுவலகம் தெரிவித்துள்ளது.

சப்ரகமுவ மாகாணத்தின் பொதுச் செயலாளராக மஹிந்த சனத் வீரசூரியவும் மேல் மாகாணத்தின் பொதுச் செயலாளராக பிரதீப் யசரத்னவும் நியமிக்கப்பட்டுள்ளனர். இந்த நியமனங்கள் ஜனவரி முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வருகின்றது என்று தெரிவிக்கப்படுகின்றது.

(எ-இ)


## THE ROYAL COLLEGE OF JAFFNA

தனியார் கல்வி நிலையம்
பிரான்பற்று வீதி, சங்கானை - 077 675 1649
பொருளியல் பாட ஆசிரியர் உடன் தேவை. அனுபவம் மிக்க பட்டதாரி ஆசிரியர். பகுதி நேரம். அனுபவத்திற்கேற்ப சம்பளம்.
A/L, 2024 Batch, கலை, வர்த்தக வகுப்புக்கள் ஆரம்பம்: 07.01.2023 சனிக்கிழமை சிறந்த ஆசிரியர் குழாம்.
தொடரபுக்கு: ந. விக்கினேஸ்வரன் ஆச்சாரி
(Diploma in English and Science London)

## உடனடி வேலை வாய்ப்புகள்

யாழ் நகரில் இயங்கும் பிரபல
அச்சக நிறுவனத்திற்கு பணியாளர்கள் தேவை.

- கணனி வடிவமைப்பாளர் (ஆண், பெண் இருபாலாரும்)
- ஸ்கிறீன் பிறிண்டிங் (பெண் பிள்ளைகள்)
- ஓவ்செட் பிறிண்டிங் (ஆண்)
- புத்தகம் கட்டுனர் (வைண்டிங்) (பெண் பிள்ளைகள்)

அச்சகத்துறையில் அனுபவமுள்ளவர்களும் பழக விரும்புபவர்களும் தொடர்புகொள்ளவும்.

தொடர்புகளுக்கு: 0771836462


# 2023 புத்தாண்டு ராசிபலன்

மார்கழி மாதம் 17ஆம் நாள் ஞாயிற்றுக் கிழமை வளர்பிறை தசமி திதியில், சமநோக்குடைய அஸ்வினி நட்சத்திரம், மேடம் ராசி, கன்னி லக்னத்தில், சிவம் நாமயோகத்தில், தைத்துலம் நாமகரணத்தில், நள்ளிரவு 12.01 மணிக்கு 01.01.2023 ஆம் ஆண்டு பிறக்கிறது.



## துலாம்

இரக்கக் குணம் கொண்டவர் நீங்கள். உங்கள் ராசிக்கு 7ம் வீட்டில் 2023 புத்தாண்டு பிறக்கிறது. உங்களின் தனித் திறமைகளை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் வரும். அழகு, இளமை கூடும். தடைகள் நீங்கித் திருமணம் கூடிவரும்.

சுக்கிரனும் புதனும் வலுவாக இருக்கும் நேரத்தில் புத்தாண்டு பிறப்பதால் பணவரவு அதிகரிக்கும். குடும்பத்தில் நிம்மதி பிறக்கும்.

29.3.2023 முதல் 23.8.23 வரை சனி பகவான் அதிசாரத்தில் 5ம் வீடான கும்ப ராசியில் சென்று அமர்வதால் பிள்ளைகளால் செலவு, மன உளைச்சல், உறவினர்கள் பணம் கேட்டு தொந்தரவு செய்வார்கள்.

குரு பகவான் 22.4.2023 வரை உங்கள் ராசிக்கு 6ம் வீட்டில் மறைந்திருப்பதால், சிலநேரங்களில் வீண் பதற்றம், வேலைச் சுமை, வீண்பழி, செரிமானக் கோளாறு வந்து நீங்கும். மறைமுக எதிரிகளை இனம் கண்டறிவீர்கள். உள்மனதில் ஒருவித போராட்டம் எழும்பும்.

குரு 23.4.2023 முதல் 7ம் வீட்டில் அமர்வதால், திடீர் திருப்பங்கள் உண்டாகும். அரைகுறையான வேலைகள் முழுமை பெறும். தடைப்பட்டிருந்த சுப நிகழ்ச்சிகள் இனி கோலாகலமாக நடைபெறும். சேமிக்கத் தொடங்குவீர்கள்.

8.10.2023 வரை உங்கள் ராசிக்குள்ளேயே கேது பகவானும் 7ம் வீட்டில் ராகுவும் நிற்பதால் சிறு சிறு உடல் பாதிப்புகள் வந்து நீங்கும். 09.10.2023 முதல் வருடம் முடியும் வரை, கேது 12ம் வீட்டிலும் ராகு 6ம் வீட்டிலும் அமர்வதால், சோர்வு நீங்கி உற்சாகம் பிறக்கும். இல்லத்தில் திருமணத் தடைகள் நீங்கும். வியாபாரத்தில் பற்று வரவு கணிசமாக உயரும்.

உத்தியோகத்தில் சின்னச் சின்ன அலைகழிப்புகள் இருக்கும். சக ஊழியர்களிடம் கவனமாகப் பழகுங்கள். விரும்பத்தகாத இட மாற்றங்கள் வரும்.

மொத்தத்தில் இந்தப் புத்தாண்டின் முற்பகுதியில் அலைச்சலும் சலிப்பும் இருந்தாலும், வருடத்தின் பிற்பகுதி உங்களைச் சாதிக்க வைக்கும்.

பரிகாரம்: நரசிம்மர் வழிபாடு நன்மை சேர்க்கும். சனிக்கிழமைகளிலும் சுவாதி நட்சத்திர நாளிலும் பானகம் நைவேத்தியம் செய்து வழிபடலாம்.

# இன்றைய நாள் (ராசிபலன்)



**மேடம்:** அதிர்ஷ்டகரமான நாள். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். எதிர்பாராத ஆதாயம் கிடைக்கும். அனுகூலம் உண்டாகும். மற்றவர்களுடன் வீண் விவாதம் செய்வதை தவிர்க்கவும்.

**இடபம்:** தந்தைவழியில் தேவையற்ற செலவுகள் ஏற்படக்கூடும். சிலருக்கு வயிறு தொடர்பான பிரச்சினைகள் ஏற்படக்கூடும் என்பதால், உணவு விஷயத்தில் கவனமாக இருக்கவும்.

**மிதுனம்:** உடல்நலனில் கவனம் தேவை. நண்பர்கள் உதவி கேட்டு வருவார்கள். எதிர்பாராத செலவுகள் ஏற்படக்கூடும். கருத்துவேறுபாடு ஏற்பட்டு நீங்கும்.

**கடகம்:** காரியங்கள் அனுகூலமாக முடியும். புதிய முயற்சிகளில் ஈடுபடலாம். செலவுகள் ஏற்படும். ஆதாயம் உண்டாகும். மகிழ்ச்சியாக காணப்படுவீர். மனதில் தன்னம்பிக்கை பிறக்கும்.

**சிம்மம்:** தொடங்கும் காரியங்கள் சாதகமாக முடியும். சிலருக்கு திடீர் செலவுகளால் கையிருப்பு குறையும். குடும்பம் தொடர்பான முக்கிய முடிவுகள் எடுப்பதைத் தவிர்ப்பது நல்லது.

**கன்னி:** எந்த முடிவையும் ஒரு முறைக்குப் பலமுறை யோசித்து எடுப்பது நல்லது. குடும்பத்தில் மற்றவர்களுடன் அனுசரித்துச் செல்லவும். சிறு சிறு பிரச்சினைகள் ஏற்படக்கூடும்

**துலாம்:** உற்சாகமாகச் செயற்படுவீர்கள். செலவு செய்ய நேரிடும். உங்கள் பொறுப்புகளைப் பகிர்ந்து கொள்வது ஆறுதலாக இருக்கும். சங்கடங்கள் ஏற்படும்.

**விருச்சிகம்:** அனுகூலமான நாள். குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக் கொள்வார்கள். வாழ்க்கைத்துணைவழி உறவுகளால் எதிர்பாராத ஆதாயம் ஏற்படும்.

**தனுசு:** சகோதரர்கள் வகையில் அலைச்சலுடன் ஆதாயமும் இருக்கும். அவசர முடிவுகளைத் தவிர்க்கவும். பிள்ளைகளின் விருப்பத்தைப் பூர்த்தி செய்வீர்கள்.

**மகரம்:** எதிலும் அவசரமில்லாமல் செயற்படவேண்டிய நாள். உறவினர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக் கூடும் என்பதால் பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.


**கும்பம்:** மனதில் இனம் தெரியாத குழப்பம் ஏற்படும். அன்றாடப் பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. வீண் விவாதங்கள் ஏற்படக்கூடும். பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது.

**மீனம்:** வீட்டில் கலகலப்பான சூழ்நிலை ஏற்படும். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். மகிழ்ச்சி உண்டாகும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதன் பொய்கை





"சிறப்புஈனும் செல்வமும் ஈனும் அறத்தினூஉங்கு
ஆக்கம் எவனோ உயிர்க்கு." -வள்ளுவர்

## மதுரையில் இடம்பெற்ற




■ மதுரையில் இருந்து திருமலை சி.புஸ்பகாந்த்

# இலங்கைத் தமிழியல் விழாவும் கருத்தரங்கும்

## - தமிழ்ச்சங்கங்களுக்கிடையே மீண்டும் முகிழ்த்த நல்லுறவு

யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கமும் தமிழ்நாடு அரசின் உலகத் தமிழ்ச்சங்கம் மதுரையும் இணைந்து முன்னெடுத்த தமிழ் வளர்ச்சியில் இலங்கைத் தமிழர்களின் பங்களிப்பு என்ற கருப்பொருளில் அமைந்த பன்னாட்டுக் கருத்தரங்கமும் இலக்கிய விழாவும் கடந்த 22ஆம், 23ஆம் திகதிகளில் மதுரையில் அமைந்துள்ள உலகத் தமிழ்ச்சங்க பெருந்திட்ட வளாக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றன.

மதுரையில் 1981 ஆம் ஆண்டு நடைபெற்ற ஐந்தாவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில் உலகத் தமிழ்ச்சங்கம் தொடங்குவதற்குரிய தீர்மானம் எடுக்கப்பட்டது. இருப்பினும் 2012 ஆம் ஆண்டிலேயே அது செயற்படுத்தப்பட்டது. மதுரை தல்லாகுளம் பகுதியில் 14 ஏக்கர் நிலப்பரப்பில் தமிழ்ச் சங்கத்திற்கெனப் பெருந்திட்ட வளாகம் அமைக்கப்பட்டது. அதன் புறமதிற்சுவரில் ஆயிரத்து 330 குறட்பாக்களும் கருங்கல்லில் செதுக்கப்பட்டன. தமிழக அரசால் தமிழுக்கென அமைக்கப்பட்ட பிரம்மாண்டமான இந்தச் செயற்றிட்டம் அன்றைய மதிப்பில் 100 கோடி இந்திய ரூபா செலவில் பிரமாண்டமான கட்டடங்களோடு செயற்படுத்தப்பட்டது.

உலகத் தமிழ்ச்சங்கம் பல்வேறு பணிகளை மேற்கொண்டு வருகிறது. இது தமிழ்வளர்ச்சித்துறை அமைச்சின் கீழ் செயற்படுகின்றது. இந்தத் திட்டப்பணிகளில் அயலகத்தில் உள்ள தமிழ் அமைப்புகளுடன் இணைந்து இலக்கியப் பணிகளை முன்னெடுத்தலும் ஒன்றாகும்.

தொன்மைவாய்ந்த யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கம் 2012 ஆம் ஆண்டு மீள அதன் பணிகளை முன்னெடுக்கத் தொடங்கியது. அதன்தொன்மையைத் தகைமையாகக் கொண்டு உலகத் தமிழ்ச்சங்கம் 2020 ஆம் ஆண்டு அதற்கு உறுப்புரிமை அந்தஸ்தை வழங்கியது. அதன் ஓர் அங்கமாக இலங்கைத் தமிழும் தமிழரும் என்ற பொருளில் அமைந்த இணையவழி ஆய்வரங்கம் நான்கு வாரங்களாக (20 நாள்கள் முன்னெடுக்கப்பட்டன) இலங்கையைச் சார்ந்த 20 ஆய்வறிஞர்கள் பேராசிரியர் அ. சண்முகதாஸ் தலைமையில் கட்டுரைகளைப் படித்தனர். இந்த இணைய வழி ஆய்வரங்கில் தமிழகக் கல்லூரிகள் சார்ந்த ஆய்வு மாணவர்கள் பலநூற்றுக்கணக்கில் பங்கேற்றுப் பயன்பெற்றனர்.

இதன் அடுத்த கட்ட நகர்வாக யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்க குழாத்தினரை உலகத்தமிழ்ச்சங்கத்திற்கு அழைத்து அவர்களின் பங்களிப்புடன் ஆய்வு மாநாடும் கலை நிகழ்வுகளும் முன்னெடுக்கப்பட்டன. யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கத்தின் பெருந்தலைவர் பேராசிரியர் அ.சண்முகதாஸ், துணைத் தலைவர்களான முனைவர் ச.மனோன்மணி, செந்தமிழ்ச் சொல்லருவி ச.லலீசன், செயலாளர் சைவப் புலவர் கு.றஜீபன் ஆகியோர் யாழ்ப்பாணத்திலிருந்து மதுரையில் இடம்பெற்ற நிகழ்வுக்கு சென்றிருந்தனர்.

தமிழ் வளர்ச்சியில் இலங்கைத் தமிழர்களின் பங்களிப்புத் தொடர்பாக 48 ஆய்வுக் கட்டுரைகள் மாநாட்டில் படிக்கப்பட்டன. இவை பெரும்பாலும் இங்குள்ள கல்லூரி பேராசிரியர்களாலும் முனைவர் பட்ட ஆய்வாளர்களாலுமே படிக்கப்பட்டன. ஆறுமுக நாவலர், தனிநாயகம் அடிகள், சி.வை.தாமோதரம்பிள்ளை, பேராசிரியர் கைலாசபதி பேராசிரியர் வித்தியானந்தன், பேராசிரியர் சிவத்தம்பி, எஸ். பொ. அ.முத்துலிங்கம். தெளிவத்தை ஜோசப், அறிஞர் சித்திலெப்பை, கலையரசு சொர்ணலிங்கம், கோ. நடேசையர் வித்துவான் சி.கணேசையர் போன்ற தமிழ் ஆளுமைகளின் பங்களிப்புகள் பற்றி கூரிய நோக்கில் கட்டுரைகள் படிக்கப்பட்டன. இவற்றுள் சில தமிழக ஆளுமைத் தளங்களுடன் ஒப்பீடு செய்வனவாகவும் அமைந்தன.

நிகழ்வின் தொடக்க விழா கடந்த 22 ஆம் திகதி வியாழக்கிழமை யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்க பெருந்தலைவர் பேராசிரியர் அ. சண்முகதாஸ் தலைமையில் நடைபெற்றது. தொடக்கநாள் மையநோக்குரையை தமிழகத்தில் புகழ்பெற்ற தமிழ்ப் பேராசிரியர் மறைமலை இலக்குவனார் நிகழ்த்தினார். முதல்நாள் மாலை பொது அரங்கில் தமிழகத்தின் பிரபல கவிஞர் ஆண்டாள் பிரியதர்சினியின் தலைமையில் 'தமிழே நீ எங்களின்...' என்ற தலைப்பில் கவியரங்கம் இடம்பெற்றது.

இதில் அறிவாக... என கவிஞர் தஞ்சை இனியனும் அன்பாகவென... இலங்கை சைவப்புலவர் கு.ரஜீவனும் ஆற்றலாக.... என கவிஞர் ரோஸ்லினும் வெற்றியாகவென... கவிஞர் மூராவும் கொள்கையாகவென... கவிஞர் பா. மகாலட்சுமியும் வீரமாகவென... கவிஞர் ஈஸ்வர ராஜாவும் கவிதை படித்தனர். தொடக்க நாளன்று யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கத்தினர் சங்கப்பேழை என்ற தமது இதழ்களின் ஒரு தொகுதியை நிகழ்வு மேடையில் அறிமுகம் செய்து உலகத்தமிழ்ச்சங்க இயக்குநருக்கு வழங்கினர்.

இரண்டாம்நாள் பொதுவரங்கில் தெய்வத்தமிழ் என்ற பொருளில் பிரபல எழுத்தாளர் இந்திரா சௌந்தர்ராஜன் உரையாற்றினார் நியூசிலாந்திலிருந்து கலந்துகொண்ட கல்வித்துறைசார் அறிஞர் முனைவர் இலக்குவன் சொக்கலிங்கமும் உரையாற்றினார். நிறைவுநாள் பொதுஅரங்கம் பார்வையாளர்களால் நிறைந்திருந்தது.

சிறப்பு நிகழ்வாக பட்டிமன்றம் இடம்பெற்றது. சமுதாய மாற்றத்தை சாதிக்கும் ஆற்றல் பேச்சிற்கா? எழுத்திற்கா? என்ற பொருளில் சாலமன் பாப்பையா பட்டிமன்றப் புகழ் எஸ். ராஜா அவர்களை நடுவராகக் கொண்டு நிகழ்வு நடைபெற்றது. இதில் பேச்சிற்கே என இலங்கையில் இருந்து செந்தமிழ்ச்சொல்லருவி ச.லலீசன் மற்றும் முனைவர் ரேவதி சுப்பிரமணியம் நாகர்கோவில் கருணாநிதி ஆகியோர் வாதிட்டனர் எழுத்திற்கேயென ராஜபாளயம் இராஜ்குமார் இலங்கை சைவப்புலவர் கு.ரஜீவன் மதுரை பேராசிரியர் மெய்யரசி ஆகியோர் வாதிட்டனர். அரங்கத்தினரை களிப்பில் ஆழ்த்திய நிகழ்வாக பட்டிமண்டபம் அமைந்திருந்தது. பெரிதும் சாதிக்க வல்லது பேச்சேயென நடுவர் ராஜா தீர்ப்புரைத்தார்.

இலங்கையின் மகாகவி குறிப்பிட்ட மீண்டும் தொடங்கும் மிடுக்கென ஆரம்பித்திருக்கும் இந்த இலக்கிய ஊடாட்டம் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட வேண்டும். இலங்கைத் தமிழியல் குறித்து ஆர்வம் கொள்ளும் தமிழக ஆய்வாளர்களுக்கு இக்கருத்தரங்கம் வரப்பிரசாதமாக அமைந்திருந்தது என்றால் மிகைப்படாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதார நெருக்கடியும் மனித வாழ்க்கையும்






ந.ரிலக்ஷனா
4 ஆம் வருட மாணவி
ஊடகக்கற்கைகள் துறை
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்

சிறிது காலத்துக்கு முன்னர் எரிபொருளுக்காக வரிசை அத்தியாவசிய பொருளுக்காக வரிசை என நமது தேவைக்காக ஒவ்வொரு வரிசைகளில் காத்திருப்போராகவே நாம் இருந்து வந்தோம். இருந்து வருகின்றோம். இன்றும் விலையேற்றம் அதிகமாகி ஒரு நாள் உழைப்பு ஒரு நாள் வாழ்க்கை நடத்துவதற்கு போதுமற்றதாக இருக்கின்றது. இந்த நிலையில் என்னதான் செய்வது எங்கு தான் போவது என்ற கேள்வி நம் ஒவ்வொருவரது மனதிலும் எழுந்துகொண்டுதான் இருக்கும். அதற்கான பதிலைத் தேடிக் கொண்டே நம் ஒவ்வொருவரதும் வாழ்க்கைப் பயணமும் தொடர்கின்றது.

இலங்கைக்கு மூன்று வழிகளில் அதிகமான பணம் வருகிறது. ஒன்று தேயிலை, இரண்டாவது ஆடை உற்பத்தி மூன்றாவது சுற்றுலா. இதை மூன்று "டி" என்கிறார்கள். பொருளாதாரத்தில் இந்த மூன்று துறைகள்தான் பெரும் பங்களிப்பை வழங்குகின்றன. இந்த வழக்கத்தை உடைத்தது 2020ஆம் ஆண்டில் வந்த கொரோனா.
2020 மார்ச் மாதம் முதல் இலங்கையும் அண்டை நாடுகளும் சர்வதேச விமானச் சேவைகளை நிறுத்தின. நாடும் முடங்கியது. பொருளாதாரத்தின் தூண்களாக இருந்த தேயிலை, ஆடை உற்பத்தி, சுற்றுலாத்துறை ஆகிய அனைத்தும் முற்றிலுமாகப் பாதிக்கப்பட்டன. இந்த மூன்றைத் தவிர வேறு எந்த நிரந்தர வருமானமும் இல்லாத இலங்கை, படிப்படியாகப் பொருளாதாரப் பின்னடைவைச் சந்திக்கத் தொடங்கியது.
அந்நியச் செலாவணி கையில் இல்லாவிட்டால் எதையும் இறக்குமதி செய்ய முடியாது. வங்கிப் பத்திரங்கள், கடன் பத்திரங்கள், வைப்பு நிதி போன்ற பல வழிகளில் அந்நியச் செலாவணி சேமிக்கப்படுகிறது.

இலங்கையில் அந்நியச் செலாவணிப் பற்றாக்குறை உணவுப் பற்றாக்குறைக்கு வழிவகுத்தது. வேறு வழியில்லாமல் உணவு தானியங்களை வேறு நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யத் தொடங்கியதால் அந்நியச் செலாவணி கையிருப்பு இன்னும் குறைந்து போனது அந்நியச் செலாவணி இருப்பு குறைந்ததால் இலங்கை நாணயத்தின் நெகிழ்வுத் தன்மையைப் பேணுவதற்காக ரூபாயின் மதிப்பை இலங்கை மத்திய வங்கி குறைத்தது. இதனால் பொருள்களின் மதிப்பு படிப்படியாக உயரத் தொடங்கியது. ஒரு டொலருக்கு நிகரான இலங்கை ரூபாயின் மதிப்பு 200 என்ற அளவில் இருந்து 300 ரூபாவுக்கும் அதிகமாகச் சரிந்திருந்திருக்கிறது.
பெற்றோல், டீசல், மற்றும் எரிவாயு, பால்மா போன்ற அத்தியாவசியப் பொருள் அனைத்தும் இறக்குமதியை நம்பியிருக்கின்றன. இவற்றுக்குக் கொடுக்கும் அளவுக்கு இலங்கை வங்கிகளிடம் டொலர் கையிருப்பில் இல்லை. அதாவது அந்நியச் செலாவணி கையிருப்பில் இல்லை. இதனால் இறக்குமதி தடைபட்டதால், பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டு விலைகள் கட்டுப்பாட்டை இழந்து உயரத் தொடங்கின.

இந்த நெருக்கடிகள் உடனடியாகத் தீர்வதாற்கான சாத்தியக் கூறுகள் கண்ணுக்கு எட்டியதூரம் வரையில் இல்லை. இலங்கை சர்வதேச நாணய நிதியத்தின் நிதியுதவியை எதிர்பார்த்துள்ளபோதும், அது இன்னமும் இலங்கைக்குக் கிடைக்கவில்லை. சர்வதேச நாணய நிதியத்தின் உதவிகள் கிடைத்தாலும் பொருள்களின் விலைகளில் மாற்றங்கள் ஏற்படப் போவதில்லை. அதேநேரம் இன்னமும் புதிய வரிகளை விதித்து அரசாங்கம் வருமானத்தை ஈட்டவே முற்படும். அதனால் இன்னமும் நிலைமை மோசமாகலாம்.

இலங்கை மக்களைப் பொறுத்தவரையில் இதுவரையில் சந்தித்திராத ஒரு நிலைமையைச் சந்திக்கின்றனர். இந்த நிலைமையில் நாளாந்த வாழ்க்கையைக் கொண்டு செல்வதே பெரும் போராட்டமாகவே இருக்கின்றது.
ஆனால் இந்த நெருக்கடியான சூழலைச் சமாளித்தே ஆக வேண்டிய கட்டாயத்தில் மக்கள் இருக்கின்றனர். அதற்கான வழியை அவர்கள் கண்டறிவதே அவர்கள் முன்பாக உள்ள சவால். ■

# விலகல் நடத்தை

சி.நற்குணலிங்கம்

## பண்பாடுகள், விழுமியங்களுக்கான சாவுமணி!



நடத்தை என்பது ஒரு மரபு சார்ந்தது. நடத்தை என்பது அகப் பொருள். சமுதாயம் விரும்பி ஏற்றுக்கொண்ட ஒரு குணம். மனிதனிடத்து உள்ள நல்லனவும், தீயனவும் அறியப்படுவதற்கு மனிதர்களிடத்தில் நடத்தை இன்றியமையாத தேவையாகிறது. ஒருவருடைய வாழ்க்கை நடைமுறைகள் நடத்தை என்று தீர்மானிக்கப்படும். நடத்தை என்பது எல்லோருக்கும் பொதுவானதாகும். வாழ்வுக்கு நன்நடத்தை முக்கியமானது. நன்நடத்தை என்பது, ஒருவன் தன்னைத்தான் கொண்டு வாழுதல். தன்னுடைய ஐம்புலன்களையும் மனதில் கட்டுக்கோப்புடன் வைத்துக்கொள்ளல் ஆகும். வாழ்க்கைக்குத் தேவையான நல்ல சிறந்த உயர்ந்த நெறிகளை எந்தநேரத்திலும் விலகாது கடைப்பிடிப்பதாகும். பிள்ளை வளர்ப்பு என்பது இலகுவான காரியமல்ல. அதுவும் ஒரு கலைதான். அந்தக் கலை வழுவாதவகையில் பிள்ளைகள் வளர்த்து எடுக்கப்படவேண்டும். அதாவது விலகல் நடத்தைகளிலிருந்து பிள்ளைகளைப் பெற்றோர் பாதுகாத்து வளர்க்க வேண்டும். மனிதனின் நடத்தைக் கோலங்களே அவனது வாழ்க்கையை தீர்மானிக்கின்றன. நன்நடத்தை உள்ளவர்கள் குடும்பத்தாலும், சமூகத்தாலும் மதிக்கப்படுகிறார்கள். விலகல் நடத்தை உள்ளவர்கள் குடும்பத்தாலும், சமூகத்தாலும் மிதிக்கப்படுகிறார்கள்.

### கணக்கெடுக்கப்படாத நன்நடத்தைகள்

இன்றைய காலகட்டத்தில் கல்விக்கோ, பணத்துக்கோ எமது சமூகம்தரும் மதிப்பில் பத்தில் ஒரு பங்குகூட நன்நடத்தைக்கு வழங்குவதில்லை என்பது கசப்பான உண்மையாகும். நன்நடத்தை எப்போதும் யாருக்கும் எந்தவிதத்திலும் பாதிப்பை ஏற்படுத்தாது. விலகல் நடத்தைகள் இன்று எப்படியெல்லாம் சீரழிவை ஏற்படுத்திவருகின்றன என்பதை கண்கூடாகப் பார்க்கின்றோம். விலகல் நடத்தை என்பது உணர்வற்ற மனிதன் வாழ்கின்ற முறையாகும். வாழ்வில் நல்ல நெறிகளைப் பின்பற்றாது நடத்தலால் விலகல் நடத்தை முன்தள்ளப்படுகிறது. நாம் அனுபவிக்கும் துன்பத்துக்கு அடிப்படைக் காரணம் விலகல் நடத்தைகளே.
பெற்றோர் பிள்ளைகளுக்கு அதிக சுதந்திரம் கொடுத்து வளர்த்தல், பிள்ளைகளுக்கு பெற்றோர் பயந்து வாழுதல், போதைப்பொருள் பாவனை, போதைப்பொருள் கடத்தல், வெளிநாட்டு பண வருகையால் தேவையற்ற செலவில், செயலில் பிள்ளைகள் ஈடுபடுதல், கண்டிப்பு, தண்டிப்பு குறைவடைந்து காணப்படல், பெற்றோர் சமூகச் சீரழிவுகளில் ஈடுபடல், பிள்ளைகளின் கூடாத நட்பு, பெற்றோரை பிள்ளைகள் ஏமாற்றிப் பொன்னான நேரத்தைச் சமூகப் பிறழ்வுகளில் செலவு செய்தல், முன்மாதிரியற்ற பெற்றோர், பிள்ளையுடன் செலவு செய்யும் நேரம் குறைவாக இருத்தல், வழி தவறிய பெற்றோர் என விலகல் நடத்தைகள் தொடர்பான பட்டியல் மிக நீட்சியானது.
இது எம் சமுதாயத்துக்குத் தேவைதானா? இந்த நிலை நீடித்துச் செல்லுமானால் எம் சமுதாயம் அதல பாதாளத்தை நோக்கிச் செல்வது உறுதியாகும். இப்படியான வாழ்க்கை ஒரு வெறுமையான வாழ்க்கையாகும். 'வாழ்க்கையை வெறுமனே வாழாதீர்கள். உங்களுக்கென்று ஒரு வாழ்க்கையை வடிவமைத்து வாழுங்கள்' - என்றார் ஜப்ரான். 'எமக்குத் தேவையில்லாத காரியங்களில் ஈடுபடுவதைவிட ஓய்வாக இருப்பது எவ்வளவோ மேல்' - என்றார் கிறேசியன் என்ற அறிஞர்.

### மூளையின் வழிதனில் நாம் பயணப்படுவோம்!

எந்த முடிவெடுத்தாலும் மூளை சொல்வதைக் கேள். மனதைக் கேட்காதே. மனதுக்கு ஆசைப்படத்தான் தெரியும். மூளைக்குத்தான் சிந்திக்கத் தெரியும். நம் வாழ்வில் கிடைக்க முடியாத பெரும் செல்வம் நாம் வீணே கழிக்கும் ஒவ்வோர் வினாடியும்தான். ஒரு தவறு செய்த பின்னர் அதனைத் திருத்திக் கொள்ளாதவன் இன்னொரு தவறு செய்தவன் ஆவான். மேலும் விலகல் நடத்தையிலிருந்து விலக என்ன செய்கிறாய் என்பதை அறிந்து செய். செய்யும் செயல் சமூகத்துக்குப் பொருத்தப்பாடுடையதா என சிந்தி.
அவ்வாறு பொருத்தப்பாடுடையதுதானென்றால் செய்வதை விரும்பிச் செய். செய்வதை நம்பிக் கையோடு செய்.

### அன்புள்ள பெற்றோரே!

தன்பிள்ளை எல்லாவற்றிலும் திறமை உள்ளவனாக வரவேண்டும் என்று பெற்றோர் ஆசைப்படுவது இயல்பு. ஆனால், பிள்ளை பிள்ளையாக வாழ, சமூக அங்கீகாரம் பெற்று வாழ, சமூகம் மதிக்கும் பிள்ளையாக வளர்ப்பதில் பலர் தவறிவிடுகின்றனர். மனிதன் உயர்நிலைப் பகுத்தறிவுள்ள விலங்கு. தான் புரியும் ஒவ்வொரு செயலுக்கும் தனது சமூகம் சார்ந்த பெறுமானங்களை அறிந்தும், புரிந்தும் வைத்திருக்கக்கூடியவன்.
எனவே அவர்களைப் பெற்றோர் உரிய காலத்தில், உரியவேளையில் கவனத்தில் எடுத்துக் கொள்ளவேண்டும். நாலுபேருக்குத் தெரியாமல் திரைமறைவில் எதையும் செய்யலாம் என நினைக்காது, ஒழுக்கம் என்பது தனக்காகக் கடைப்பிடிக்கப்படவேண்டிய ஒன்று என்பதை புகுந்து நடக்கவேண்டும்.
எமது பண்பாடுகள் எவை?, எமது கலாசாரம் தொலைகின்ற இடங்கள் எவை? எங்கே நாம் நிற்கின்றோம்? இந்தக் கேள்விகளுக்கு விடைகளைப் பெற்றோரும், பிள்ளைகளும் இணைந்து தேடவேண்டும். இந்தக் காலப் பகுதியில் பெற்றோர் தம் பார்வையை முழுமையாகப் பிள்ளைகள் மீது விலகலற்றுக் காட்டவேண்டும். அவ்வாறு காட்டத் தவறியவர்களின் பிள்ளைகள் விலகல் நடத்தைக் கோலத்தில் ஈடுபடுகிறார்கள். பெற்றோர் ஏனோதானோ என வாழாது இப்படித்தான் வாழவேண்டும் என நினைத்து தாமும் வாழ்ந்து, பிள்ளைக்கும் வழிகாட்டியாக வாழவேண்டும்.
உலகமயமாக்கலின் விளைவுகள் எமது ஊர்வரை மட்டுமல்ல பாடசாலைக்குள்ளும் வந்து பிள்ளைகளைத் தொலைத்துவிட முயற்சி எடுக்கின்றன. சமூகத்தில் நன்றாக வாழவேண்டிய பிள்ளைகளில் சிலர் மருத்துவமனைகளிலும் சிறைகளிலும் காலத்தைக் கழிக்கிறார்கள். மனித வளத்துக்கு மதிப்புக்கொடுத்து வாழுங்கள். பிளைகள் தம் நன்நடத்தைகளிலிருந்து விலகாது வாழவேண்டும். அதற்கு ஈடுகொடுத்து வெற்றிகாண பெற்றோரின் பங்கு முக்கியமானதாகும். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வீழ்ந்துகிடக்கும் வணங்கா மண்!

அன்ரன் அருள்வண்ணன்

**எல்லாப் பயிர்நிலங்களிலும் விளைச்சலை எதிர்பார்த்து பயிற்செய்கை செய்யப்படுகிறது. இருப்பினும் களையும் வளர்ந்து தலைதூக்கும். கண்ணுக்கெட்டிய மறுகணமே வேரறுத்து எறிவான் உண்மையான விவசாயி. ஆனால், யாழ். மண்ணில், வடக்கில் எமது கண்களுக்கு புலப்படுவது களைகள் காக்கப்படுதலும், களைகள் ஊக்கப்படுதலும்தான்.**

**இதன் விளைவாக உலகெங்கும் கல்வியில், வீரத்தில், ஒழுக்கத்தில் தலைநிமிர்ந்து நின்ற வணங்கா மண் வடக்கு தற்போது தலை குனியத் தொடங்கியிருக்கின்றது.**

### பொலிஸாரின் அசமந்தம்

நன்மையும் தீமையும் ஒருங்கே இருக்க முடியாது. தீமை எப்போதும் நன்மையைக் குறித்துப் பயப்படும். தீயவர்கள் நன்மை செய்பவரை அல்லது நீதிமானை நெருக்குவார்கள். கையூட்டு வாங்கி அல்லது செல்வாக்கு அடிப்படையில் குற்றவாளிகள் தப்பித்துக்கொள்ளுவதென்பது, வெறுமனே குற்றவாளிகள் தப்பித்துக்கொள்வதுடன் மட்டுப்படுத்தப்படும் விடயமல்ல. மாறாக இந்தக் குற்றவாளிகள் தாம் எவ்வாறு தண்டனைக்குத் தப்பினோம் என்று மார்தட்டி சமூகத்துக்குச் சொல்லும் செய்தி. இது நீதியான சமூகம் உருவாக இருக்கும் சாத்தியத்தை வேரோடு பிடுங்கி எறிகிறது.

பொலிஸார் சட்டத்தை கரிசனையுடன் நடைமுறைப்படுத்தியிருந்தால் தண்டனை கிடைக்காமற் போகாது. அவ்வாறு பொலிஸார் நேர்மைத்தனத்துடன் நடந்திருந்தால், அவர்களின் நடத்தையானது, நீதியான பாதையையே பின்பற்ற வேண்டும் என்ற மிக நல்ல எண்ணங்களை இருதயங்களில் விதைத்திருக்கும். ஆனால், இங்கு பொதுமக்களின் பாதுகாவலர்களாகத் தம்மைத்தாமே கூறிக்கொள்ளும் வேலியே பயிரை மேய்கின்றது. களைகளே வடக்கில் விளைந்து கிடக்கிறது. இது சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட தவறிய பொலிஸாரின் கைவண்ணம் என்பது தெளிவாகின்றது.

### இருட்டும் திருட்டும்

இன்று வடக்கில் மிகப்பெரிய பிரச்சினைகளில் ஒன்று கொள்ளையும் திருட்டும். இதை பொலிஸ் துறை சரியாகக் கையாள்கிறதா? சாதுரியமாகக் கையாளுகிறதா? திருடர்களை பிடிக்க வேண்டும். மக்களை நிம்மதியாக இரவில் உறங்கவிட வேண்டும் என்று மனதளவிலாவது நினைக்கிறார்களா? என்றால் 'இல்லை' என்பதுதான் திட்டவட்டமான பதில். ஒரு பிரதேசத்தில் உள்ள பொலிஸாருக்கு அவர்கள் கடமையாற்றும் பிரதேச வரைபடம் தெரிந்திருக்க வேண்டும். அத்தோடு 90 வீதம் தமிழ் பேசும் மக்கள் வாழும் வடக்கில் தமிழே தெரியாத பொலிஸார் எவ்வாறு சேவையாற்றுகின்றனர்?. இவர்களுக்கு முகவரியையும் பிரச்சினையையும் சொல்லி விளங்க வைக்கும் நேர இடைவெளியில் திருடர்கள் தமது அலுவல்களை முடித்துக்கொண்டு வீடு சென்று உறங்கத் தொடங்குவார்கள்.

இலங்கையில் உள்ள 184 பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளில் 182 பேர் அந்தப் பதவிகளுக்குத் தகுதியற்ற அதிகாரிகள் எனவும் நேர்முகப் பரீட்சையில் சித்தி பெறாமல் அரசியல் செல்வாக்கால் நியமனம் பெற்றவர்கள் எனவும், 130 பேர் போதைப் பொருள் வியாபாரிகளுடன் நேரடியான தொடர்புள்ள நபர்கள் எனவும் புலனாய்வுப் பிரிவினருக்கு தகவல்கள் கிடைத்துள்ளதாக பொலிஸ்மா அதிபர் சில மாதத்துக்கு முன்னர் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு அனுப்பிய கடிதம் ஒன்றில் தெரிவித்திருந்தார். தகுதியற்ற மருத்துவர்கள் எவ்வாறு சிகிச்சை அளிக்க முடியும்? நோயாளி மேலும் நோயாளியாகி ஈற்றில் இறந்துவிடுவாரே? இது இவ்வாறு இருக்க தகுதியற்றவர்கள் எவ்வாறு சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட முடியும்?

### பெற்றோரின் கடமை

ஒரு பிள்ளை போதைப்பொருளுக்கு ஆட்படுமா என்பது அந்தப் பிள்ளையின் வளர்ப்பில் தங்கியுள்ளது. யாழில் பிறந்து வளர்ந்து பின் உயர் கல்விக்கு ஆண்டாண்டு காலமாக தெற்குக்கும் பின்னர் உலகெங்கும் சென்றவர்கள் அங்கு போதைக்கு அடிமையாவது இல்லையே. ஏனெனில் பல கெட்ட பழக்கம் உடைய மக்களின் நடுவில் நல்ல மனிதனாக வாழ்ந்து காட்டுதல் என்பது உண்மையில் ஒரு போதை. யாருமே சாதிக்க முடியாததை கல்வியில் தொழில்நுட்பத்தில் சாதித்துக் காட்டுவது ஒரு போதை. யாருக்கும் கிடைக்காத அழகிய தாய்மொழியைப் பேசுவது ஒரு போதை. தமிழன் என்று தலை நிமிர்ந்து நிற்பதே ஒரு போதை.

இவ்வாறு கணக்கற்ற போதைகளை நம் கண்முன்னே காட்டினர் நம் முன்னோர். ஆனால், சிங்கள அரசின் வருகைக்குப் பின்னர் வந்து நுழைந்து பரவவிடப்பட்ட போதை, கடைசியில் அல்லது முற்றிய நிலையில் மனநல மருத்துவர்களால் சிகிச்சை அளிக்கும் நிலைக்கு இட்டுச் செல்லக்கூடிய போதை. எந்தப் போதையை தெரிவது என்பது எங்கள் கையில்தான் உள்ளது.

### எது கடமை?

பொலிஸார் தமது கடமைகளைப்பற்றி நினைக்கும் மாதங்களாக மே மாதம், கார்த்திகை மாதம் என்பனவற்றைக் குறிப்பிடலாம். இந்த மாதங்களில் பொலிஸ்துறை புதுப்பொலிவு பெற்று உடலில் ஊட்டச்சத்து பெற்று முக மலர்ச்சியுடன் தாம் பொலிஸார் என்ற ஒரு கம்பீரத்துடன் செயற்படுவதை அவதானிக்க முடிகிறது.

மாவீரர்களின் நினைவேந்தல்களிலும் இறந்த மக்களுக்கான அஞ்சலிகளைத் தடைசெய்வதிலும் அவர்கள் இந்தக் கம்பீரத்தையும் பொறுப்புணர்வையும் காண்பிக்கின்றனர். ஆனால், அதே கம்பீரம், முகமலர்ச்சி போதைப்பொருள் கடத்தலை முறியடிக்கவேண்டும் அல்லது திருடர்களை பிடிக்க வேண்டும் என்பதில் கொஞ்சம்கூட இருப்பதாகத் தெரியவில்லை. மீதமான மாதங்களில் இவர்கள் உறங்கு நிலையில் இருக்கிறார்கள் என்பதே உண்மை.

2009க்கு முன்னதாக வடக்கின் பல பாகங்களிலும் தவறு செய்தால் தண்டனையில் இருந்து தப்ப முடியாது. தண்டனை எப்படியும் கிடைத்தே தீரும், எங்கும் ஒளிக்க முடியாது என்ற சிந்தனை ஆழப் பதிந்த சமூகமே இருந்துவந்தது. ஆனால், அதன் பிறகு கையூட்டு, சாராயப் போத்தல்கள், சிகரெட்கள் இவற்றின் மூலம் குற்றத்தில் இருந்து தப்பிக்கலாம் என்கின்ற மனோ நிலைமை. அதற்கான விதைகள் வடக்கு எங்கும் தாராளமாகக் விதைக்கப்பட்டு இன்று மரங்களாக யாழ்ப்பாணம் முழுவதும் பல குற்றவாளிகளுக்கு நிழல் கொடுத்துக் கொண்டிருக்கிறது.

போதைவஸ்து, லஞ்சம், விபச்சாரம், தவறான வழியில் பணம் சம்பாதித்தல் இவ்வாறான அத்தனையும் இருக்கும் இடத்தில் நேர்வழியில் செல்லக்கூடிய வழி பிறழாத பயிர்களை உருவாக்க வேண்டும். அவ்வாறான பயிர்களே இந்த மண்ணில் விளைந்தன. இன்னமும் பல நாடுகளில் தங்கள் விளைச்சலைக் கொடுத்து தாம் சென்ற மண்ணை அலங்கரிக்கின்றன.

## நூல் வெளியீட்டு விழா



ஓய்வுநிலை பாடசாலை அதிபர் கலாபூஷணம் எஸ்.ஏ.மிராண்டா எழுதிய 'நினைவழியாப் பதிவுகள் சில' நூல் வெளியீடு, பத்திமா கழகத்தின் தலைவர் சூசை புறுனோ டயஸ் தலைமையில் பேசாலை புனித வெற்றிநாயகி ஆலய மண்டபத்தில் கடந்த 17ஆம் திகதி சனிக்கிழமை இடம்பெற்றது.

நிகழ்வில் கலந்துகொண்ட மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவரும் பேசாலை பங்குத் தந்தையுமான அருட்பணி ஏ.ஞானப்பிரகாசம் அடிகளார் இந்த நூலை வெளியீட்டு வைத்தார்.

குறித்த நிகழ்வில் மன்னார் மாவட்ட செயலர் ஏ.ஸ்ரான்லி டிமெல், முன்னாள் வலயக் கல்விப் பணிப்பாளர் ம.ஆபேல் றெவ்வல், முன்னாள் மன்னார் மறைமாவட்ட முதியோர் சமாச இயக்குநர் அருட்பணி அல்பன் ராஜசிங்கம் அடிகளார் (அ.ம.தி), வவுனியா பங்கு தந்தை அருட்பணி எஸ்.கே.தேவராஜா அடிகளார், மன்னார் ஞானோதயம் அதிபர் அருட்பணி செ.ஜெயந்தன் பச்சேக் அடிகளார் (அ.ம.தி.) மன்னார் பேராலய பங்குத் தந்தை அருட்பணி இரா.அகஸ்ரின் புஸ்பராஜா அடிகளார், பெரியகட்டு புனித அந்தோனியார் திருத்தல பரிபாலகர் அருட்பணி க.அ.அருள்ராஜ் குரூஸ் அடிகளார், பேசாலை உதவிப் பங்குத் தந்தை அருட்பணி செ.டிசாந்தன் அடிகளார் உட்பட பலர் கலந்துகொண்டனர். (60)



## நல்லூர் நூலகங்களால் பரிசளிப்பு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், டிசெ. 19

நல்லூர் பிரதேசசபையின் ஆளுகைக்குட்பட்ட நூலகங்களால் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளுக்கான பரிசளிப்பு நிகழ்வு நல்லூர் பிரதேசசபையின் கலாசார மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழகத்தின் மூத்த உதவி நூலகர் கலாநிதி திருமதி கல்பனா சந்திரசேகர், சிறப்பு விருந்தினர்களாக நல்லூர் பிரதேச சுகாதார மருத்துவ அதிகாரி ரொனால்ட் சுகந்தராஜ் ஜெயம், மாகாண உதவி கல்வி பணிப்பாளர் ஏ.சுபகாகரன், நல்லூர் பிரதேசசபை தவிசாளர் மயூரன் ஆகியோர் கலந்துகொண்டனர். (125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதன்பொய்கைக்கு எழுதுங்கள்

புதன்பொய்கையில் உங்கள் ஆக்கங்கள் (இலக்கியம், கலை மற்றும் கலாசாரம்), இலக்கியப் படைப்புக்கள் விமர்சனங்கள், கவிதைகளை பிரசுரிக்க ஒரு வாய்ப்பு. உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் கலை, கலாசார நிகழ்வுகள், நூல்வெளியீடுகள், ஆற்றுகைகள் தொடர்பான பதிவுகளையும்புகைப்படங்களுடன் அனுப்புங்கள்.

**அனுப்ப வேண்டிய முகவரி :**

புதன்பொய்கை, உதயன்
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

மின்னஞ்சல் முகவரி :
**puthanpoigai@gmail.com**



# பண்பாட்டு அம்சங்களுடனான மாந்தை மேற்கு கலாசார விழா

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் மாந்தை மேற்கு பிரதேசசெயலகமும் கலாசாரப் பேரவையும் இணைந்து பிரதேச கலாசார விழாவை அண்மையில் முன்னெடுத்தன.

இந்த விழாவானது மாந்தை மேற்கு பிரதேச செயலரும், கலாசாரப் பேரவையின் தலைவருமான கனியூட் அரவிந்தராஜ் டெனிசியஸ் தலைமையில் மாந்தை வடக்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்க கலாசார மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது. இந்த விழாவுக்கு பிரதம அதிதியாக மன்னார் மாவட்டச் செயலர் அ.ஸ்ரான்லி டிமெல் கலந்துகொண்டார். சிறப்பு விருந்தினராக மடு வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் இவ்வோன் எல்.எல், கௌரவ விருந்தினர்களாக கலாபூஷணம் சபாரெட்ணம் சிவதாசன், கலாபூஷணம் சந்தியாப்பிள்ளை அருளானந்தம் ஆகியோர் கலந்துகொண்டனர். (60)



தென்மராட்சிப் பிரதேச செயலக பண்பாட்டுப் பெருவிழா பிரதேச செயலர் உஷா சுபலிங்கம் தலைமையில், சாவகச்சேரி கலைமன்ற கலாசார மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது. இதன்போது பாரம்பரிய கலை நிகழ்வுகள் இடம்பெற்றதுடன், பிரதேசத்தின் உயர் விருதான "கலை சாகரம்", மூத்த கலைஞர்கள் மூவருக்கும் இளங்கலைஞர்கள் மூவருக்கும் வழங்கப்பட்டன.

மேற்குறித்த விழாவையொட்டி பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்ட திருக்குறள் போட்டிகளில் பங்குபற்றிய மற்றும் வெற்றியீட்டிய மாணவர்களுக்கும், 2022 ஆம் ஆண்டுக்கான பிரதேச கலை இலக்கியப் போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கும் சான்றிதழ்களும், பரிசில்களும் வழங்கப்பட்டன. (9)





வலிகாமம் கிழக்கு - கோப்பாய் பிரதேச பண்பாட்டு பேரவையால் வலிகாமம் கிழக்கு பிரதேசசெயலக மண்டபத்தில், பிரதேசசெயலர் ம.சுபாஜினி தலைமையில் பண்பாட்டுப் பெருவிழா அண்மையில் இடம்பெற்றது.

# 'கிருஸ்ண மூர்த்தம்' மணிவிழா நூல் வெளியீடு




இரா.நிஷாந்தன்

கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த 30 ஆண்டுகளாக கல்விப்பணியை சிறப்பாக முன்னெடுத்த இந்த ஆண்டிலே ஓய்வுபெறுகின்ற கிளிநொச்சி தெற்கு வலயத்தின் தமிழ்ப்பாட ஆசிரிய ஆலோசகர் கணபதிப்பிள்ளை கிருஸ்ணமூர்த்தியின் 'கிருஸ்ணமூர்த்தம்' எனும் மணிவிழா நூல் வெளியீடு அண்மையில் கிளிநொச்சி இந்துக்கல்லூரி பிரதான மண்டபத்தில் சிறப்புற நடைபெற்றிருந்தது.

இந்த நூல் வெளியீட்டின்போது கிளிநொச்சி இந்துக்கல்லூரி அதிபர் மீனலோஜினி இதயசிவதாஸ் தலைமை தாங்கிட, முல்லைத்தீவு மாவட்ட மேலதிக மாவட்டச் செயலர் சிவபாலன் குணபாலன் முதன்மை விருந்தினராகவும், சிறப்பு விருந்தினராக கிளிநொச்சி தெற்கு வலயக்கல்விப்பணிப்பாளர் கிறிஸ்தோபர் கமலராஜனும், கௌரவ விருந்தினராக கிளிநொச்சி இந்துக்கல்லூரியின் ஓய்வுநிலை அதிபர் கார்த்திகேசு ராஜஜெயமும் கலந்து சிறப்பித்திருந்தனர்.

கிருஸ்ணமூர்த்தம் மணிவிழா நூலுக்கான மதிப்பீட்டுரையை முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் மத்திய மகாவித்தியாலயத்தின் அதிபர் சி.நாகேந்திரராசா சிறப்புற வழங்கியிருந்தார்.


கிருஸ்ணமூர்த்தம் மணிவிழா நூலில் ஆசியுரைகள், வாழ்த்துரைகள், வாழ்த்துக்கவிகள் அடங்கலாக கல்விசார் கட்டுரைகள், இலக்கிய மற்றும் மொழிசார் கட்டுரைகள், கவிதைகள் முதலான சிறப்பான படைப்புக்களை உள்ளடக்கி வெளிவந்துள்ளது. தனது 30 ஆண்டுகால கல்விச்சேவையின்போது ஆசிரியராக, பிரதி அதிபராக, பதில் அதிபராக சேவையாற்றி இன்று வரை கடந்த 14 ஆண்டுகளாக ஆசிரிய ஆலோசகராக சேவையாற்றி தனது 60ஆவது அகவையில் ஓய்வினை பெற்றுச் செல்கின்ற கிருஸ்ணமூர்த்தியின் சேவையைப் பாராட்டி மதிப்பளிக்க வேண்டும் எனும் உயரிய நோக்கில் கிளிநொச்சி மாவட்ட தமிழாசிரியர்களின் பெரு முயற்சியால் 'கிருஸ்ணமூர்த்தம்' எனும் பெயர் தாங்கியதாக இந்த நூல் வெளிவந்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமஹ

# 31ஆம் நாள் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



மலர்வு: 21.11.1955

உதிர்வு: 01.12.2022

கடந்த (01.12.2022) அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர்

## அமரர் நடராசா அற்புதராசா

அவர்களின் சிவபதப்பேறு குறித்த அந்தியேட்டிக் கிரியைகள் 29.12.2022 வியாழக்கிழமை 9 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்று அஸ்தி கரைக்கப்படும். தொடர்ந்து 31.12.2022 சனிக்கிழமை மு.ப. 11 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.


**பிரதான வீதி,**
**மகாறம்பைக்குளம், வவுனியா**
**076 1043132, 0776708451**

**தகவல்,**
**குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்

## சுவாமிநாதன் கனகராசா

தோற்றம் 29.12.1941 மறைவு 27.12.2022



யாழ். மானிப்பாயை பிறப்பிடமாகவும், தற்போது நெல்லியடியை வதிவிடமாகவும் கொண்ட சுவாமிநாதன் கனகராசா நேற்று (27.12.2022) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்துள்ளார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான சுவாமிநாதன் பகவதி தம்பதிகளின் மகனும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை பார்வதி தம்பதிகளின் மருமகனும், காலஞ்சென்ற இராஜேஸ்வரி (ஓய்வு பெற்ற தாதி) அவர்களின் அன்புக் கணவரும், தர்மசீலன் (பாபு), காலஞ்சென்ற இராமச்சந்திரன் (பபா), மற்றும் சந்திராவதி, காலஞ்சென்ற தர்மராசா (ஆச்சா), மற்றும் தர்மதுரை (பௌசி), காலஞ்சென்ற தர்மரட்ணம் (ரஞ்சன்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், ஜெயரூபன், காலஞ்சென்ற ஜெயந்தன் (கண்ணன்), மற்றும் கஜந்தன், மயூரன் (கோபி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், பத்மலோஜினி, கவிதா, தரணி ஆகியோரின் அன்பு மாமனாரும், கீர்த்தனா, கஜானன், கஜனி, பிரகலாதன், பிருந்தாபன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (28.12.2022) புதன்கிழமை தாரிக்கப்பற்று நெல்லியடி கிழக்கு கரவெட்டியில் உள்ள அன்னாரின் இல்லத்தில் முற்பகல் 10.30 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வதிரி ஆலங்கட்டை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தொடர்புகளுக்கு :**
**கஜந்தன் 0772627559 (நெல்லியடி )**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

## போதையை கட்டுப்படுத்த பொலிஸ் குழு

கொழும்பு, டிசெ.28

மத்திய மாகாணத்திலுள்ள பாடசாலைகளில் போதைப்பொருள் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவதற்காக 47 விசேட பொலிஸ் குழுக்களை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். பொலிஸ்மா அதிபரின் பணிப்புரைக்கமைய, மத்திய மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபரின் தலைமையில், இந்த விசேட பொலிஸ் குழுக்கள் நியமிக்கப்படவுள்ளன.

(எ-இ)

# பெயர் மாற்றம்

இல.398 ஆறுமுகம் வீதி, வட்டக்கச்சியில் வசிக்கும் **பரமகுரு பரமநாதன்** ஆகிய நான் இன்றுமுதல் எனது பெயரை **பரமகுரு பத்மநாதன்** என மாற்றம் செய்வதோடு, இனிவரும் சகல ஆவணங்களிலும் **பரமகுரு பத்மநாதன்** என்றே கையெப்பமிட்டு பயன்படுத்துவேன் என இலங்கை சோசலிச குடியரசு மக்களுக்கு உறுதிப்படுத்துகின்றேன்.

(cs 47402) (2.6)

பரமகுரு பத்மநாதன்

# சமையலாள் தேவை

யாழ்.நகரில் தனியார் நிறுவனம் ஒன்றில் தனிநபர் ஒருவருக்கு சமையல் செய்யக்கூடிய ஒருவர் தேவை.
சம்பளம் பேசித்தீர்மானிக்கலாம்.
**பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**


**077 959 2628**

# மரண அறிவித்தல்

## யோகேஸ்வரன் ஜெயக்குமார்

**(ஓய்வுநிலை உதவிப்பதிவாளர்- யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)**
**நகராட்சிமன்ற உறுப்பினர் - 6ம் வட்டாரம், சாவகச்சேரி, நகரசபை**

தோற்றம் : 21.10.1953 மறைவு: 27.12.2022



தாமோதரம்பிள்ளை வீதி, சங்கத்தானை, சாவகச்சேரியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திரு.யோகேஸ்வரன் ஜெயக்குமார் நேற்று (27.12.2022) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான யோகேஸ்வரன்- காமாட்சி தம்பதியரின் அன்புமகனும் காலஞ்சென்றவர்களான கந்தையா- இராசபூபதிதம்பதியரின் அன்பு மருமகனும் கலாயினிச்சித்திராவின் பாசமிகு கணவரும் சூரியகுமாரின் அன்புச் சகோதரனும் வாணி (நிதி உதவியாளர்- U.K.), மேனகா (விரிவுரையாளர்- மனைப்பொருளியல் அலகு- யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்), ரம்மியா (யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் ) ஆகியோரின் அருமைத் தந்தையும் கலாபன் (Senior Design/ Project Manager - UK), சிவாகரன் (விரிவுரையாளர்- தொழில்நுட்பக் கல்லூரி- யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமனும் ஹரிஷ் (U.K) அஸ்லின் (U.K), ஹரிணி (U.K) ஆதன்யன் ஆகியோரின் ஆசைப்பேரனும் காலஞ்சென்ற பரமேஸ்வரி, பத்மினி, சுதந்திரா மற்றும் ரஞ்சினி சுபத்திரா, தேவேந்திரசிறீக்காந்தா (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் காலஞ்சென்ற ஜெகநாதன், நாகேஸ்வரன் மற்றும் ஜீவமதி (அவுஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு சகலனும் மீரா (U.K), பிரியா (U.K), செந்தூரன் (கனடா), கௌசலா (சிங்கப்பூர்), லவணன் (U.K), லோகுலன் (U.K) ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும் ராதாகிருஸ்ணா (அவுஸ்திரேலியா) அகிலன் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் எதிர்வரும் வெள்ளிக்கிழமை (30.12.2022) முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தாமோதரம்பிள்ளை வீதி,**
**சங்கத்தானை,**
**சாவகச்சேரி.**

**தகவல் : குடும்பத்தினர்**
**தொடர்புகளுக்கு : 077 3164236**
**077 3126394**

# மரண அறிவித்தல்

பிறப்பு 05 . 10 . 1951

இறப்பு 26 . 12 . 2022



## இராமு இராமதாஸ்

யாழ்.துன்னாலை மேற்கு கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனி Bunde ஐ வதிவிடமாகவும் கொண்ட இராமு இராமதாஸ் (ஞானம்ஸ் மில்) அவர்கள் 26.12.2022 திங்கட்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இராமு- இலட்சுமிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற மயில்வாகனம்- அன்னலட்சுமி (ராசா) தம்பதிகளின் அன்பு மருமகனும் ஜெயமங்களேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும் ரஸ்மி, ரஸ்மன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் சாரா அவர்களின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான ஜெகதீஸ்வரநாதன், ஜெகதீஸ்வரதேவி மற்றும் இராமச்சந்திரன், சண்முகநாதன் ஆகியோரின் பாசமிகு சகோதரரும் சத்தியலீலா, தாமோதரம், இராஜேஸ்வரி, பவானி, காலஞ்சென்ற மதியாபரணம், மங்கையர்க்கரசி, தேவிகா, சிவலிங்கராஜா, சிவமணி, சிவநேசன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (29.12.2022) வியாழக்கிழமை ஜேர்மனியில் நடைபெறும். அன்றைய தினம் (29.12.2022) வியாழக்கிழமை துன்னாலை மேற்கு, கரவெட்டியில் உள்ள அன்னாரது இல்லத்தில் மாலை 4.30 மணியளவில் ஆத்மசாந்திப் பிரார்த்தனை நடைபெறும்.

இவ்வறிவித்தலை உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**கோவிற்சந்தை,**
**துன்னாலை மேற்கு,**
**கரவெட்டி.**

**தகவல் : குடும்பத்தினர்**
**தொடர்பு: 077 4707965**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் .....

இம் மாதம் 16 ஆம் திகதி முதல்

நத்தார் மற்றும் புதுவருட

# ஜவுளிப் பண்டிகை

ஆண்கள் மற்றும் பெண்களுக்கான

தலை சிறந்த ஆடைகள்

திருமண பட்டுச் சாறிகள்,
கொட்டன் சாறிகள்,
சல்வார்கள்,
சல்வார் துணிகள்,
டொப், புரோக்
மற்றும் ஏராளமான
ஆடைத் தெரிவுகள்



நெற் சல்வார், கொட்டன் சல்வார்

~~5000/=~~ 2000/=

இது பிரமாண்ட ஜவுளித் துறையின் சாம்ராஜ்யம்

## இந்தியன் செலக்ஷன்

காலம் : 16.12.2022 முதல் 01.01.2023 வரை

இடம் : வீரசிங்கம் மண்டபம், யாழ்ப்பாணம்

(ஞாயிற்றுக்கிழமைகளிலும் திறந்திருக்கும்)



# நடமாடும் மருத்துவ தாதிய சேவை
# Mobile Medical Nursing

**யாழ். மக்களின் வீட்டிற்கே வரும் எமது சேவை**

இலங்கை மருத்துவ சபையின் (SLMC) இல் பதிவுபெற்ற அரச வைத்தியசாலையில் பல வருட அனுபவம் வாய்ந்தவர்களின் சேவை.

- வயோதிபர்கள்
- படுக்கையில் இருக்கும் நோயாளிகள்
- வயோதிபர் இல்லங்கள்
- வைத்தியசாலை செல்ல உதவியற்றவர்கள்
- வைத்திய சாலை சிகிச்சையின் பின் தொடர்சியான தேவைக்கும்
- வெளிநாடுகளில் வசிப்போர் தமது உறவுகளின் தேவைக்கும் எம்முடன் தொர்புகொள்ளவும்.

01. குருதி அமுக்கம் அளவீடும் அட்டவணைப் படுத்தலும் (Blood Pressure)
02. ஊசி போடுதல் (Injection)
03. குருதியில் சீனியின் அளவு பரிசோதனை (Blood Sugar test)
04. காயங்களிற்கு மருந்துகட்டல் (Wound Dressing)
05. சத்திரசிகிச்சை தையல் அகற்றல் (Suture Removal)
06. படுக்கை புண்ணிற்கான விசேட பராமரிப்பு (Special Care for Bed Sore)
07. குருதி / சலம் / சளி பரிசோதனைகள் (Blood / Urine / Sputum Test)
08. முட்டு / ஆஸ்மா நோயாளர்களுக்கான பராமரிப்பு (Nebulizing)
09. மாதாந்தம் சலக்குழாய் மாற்றல் (Urinary Catheter Change)
10. குளுக்கோஸ் / சேலைன் ஏற்றல் (I.V.fluids)
11. பாரிசவாதம் / சத்திர சிகிச்சையின் பின்னரான உடல் அப்பியாசம் (Phisio therapy)
12. பொருத்தமான விசேட வைத்திய நிபுணர் ஒழுங்கமைத்தல்
13. அம்புலன்ஸ் சேவை வழங்குதல்

**மற்றும் உங்கள் அனைத்து மருத்துவ தாதிய தேவைகளுக்கும் தொடர்புகொள்ளவும்.**

தொலைபேசி: 077 007 0646 - Viber / Whatsapp

மின்னஞ்சல்: - mmnservicej@gmail.com

(cs.4847) (2.6)



**பணிப்பெண் தேவை**


யாழ். நகரில் வீடு ஒன்றில் வீட்டு வேலை செய்வதற்கு 35 வயதுக்கு மேற்பட்ட வீட்டுப் பணிப்பெண் தேவை.

077 248 7316


## 14ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 19 . 11 . 1964

மறைவு 28 . 12 . 2008



**ஞானப்பிரகாசம் ரவீந்திரன்**

அதிசயமாக எம்மை விட்டுப்
பிரிந்த அப்பாவே!
ஊரே உங்களைப் பார்த்து மெய்சிலிர்த்த
வாழ்வு ஏனோ முடிந்துபோனது
உதவியென்றால் உங்கள் கரம்
அரவணைக்கும் என்ற உண்மை
உறங்கிப்போனதோ!

நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

மனைவி, மகள்கள்.

சாவகச்சேரி

## நகரசபை உறுப்பினர் மாரடைப்பால் இறப்பு

யாழ்., டிசெ. 28

சாவகச்சேரி நகர சபை உறுப்பினரும் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சியின் தென்மராட்சி அமைப்பாளரும் சமூக செயற்பாட்டாளருமான யோகேஸ்வரன் ஜெயக்குமார் மாரடைப்புக் காரணமாக நேற்றுக் காலமானார்.

இவர் யாழ்ப்பாண பல்கலைக்கழக ஓய்வுநிலை உதவிப்பதிவாளரும், சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்க ஆலோசகருமாவார்.

(அ-ம-159)

# மரண அறிவித்தல்

பிறப்பு 25 . 04 . 1943

இறப்பு 26 . 12 . 2022



**திருமதி பாஸ்கரதாஸ் புவனேஸ்வரி**

(சுழிபுரம் - புவனக்கா)

திசைமழை சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும், மானிப்பாய் வீதி, சோனகத்தெரு யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பாஸ்கரதாஸ் புவனேஸ்வரி 26.12.2022 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா தங்கம்மா தம்பதியரின் மூத்த புதல்வியும், காலஞ்சென்றவர்களான அப்பாத்துரை நாகரத்தினம் தம்பதியரின் மூத்த மருமகளும், காலஞ்சென்ற பாஸ்கரதாஸ் அவர்களின் அன்பு மனைவியும், அனுசிய (France), மதியழகன் (முகாமைத்துவ உத்தியோகத்தர் யாழ். பிரதேச செயலகம்), மதிசுதன் (France), ஆகியோரின் பாசமிகு தாயாரும், அருள்மொழித்தேவன் (France), நந்தினி, குமுதினி (France) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான சுப்ரமணியம், இரத்தினம், பாலசிங்கம் மற்றும் மனோகரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற பத்மாவதி மற்றும் நாகேஸ்வரி, வசந்தகுமாரி, கோபாலகிருஷ்ணன், காலஞ்சென்றவர்களான பாலசுந்தரம், தங்கராசா, இராஜேஸ்வரி மற்றும் லோகேஸ்வரி, சத்தியபாமா, புவனேஸ்வரி, லோகேஸ்வரன் (France) ஆகியோரின் மைத்துனியும், அனுசன், அர்ச்சனா, துவாரகன், தனாதரன், யதுசாரகன், நிவேதா, நிவேந்தன், நிவேஸ் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.12.2022) புதன்கிழமை அவரது இல்லத்தில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக நண்பகல் 12.00 மணியளவில் கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவத்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்

மகன் - 076 378 9392

மருமகள் - 077 586 0819

81, BS ஒழுங்கை, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

(cs.22481) (2.6)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம் 09 . 09 . 1945



மறைவு 27 . 12 . 2022

## தவபாக்கியம் தில்லைநாதன்

வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் சாவகச்சேரி நுணாவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி **தவபாக்கியம் தில்லைநாதன்** நேற்று (27.12.2022) செவ்வாய்க்கிழமை காலை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் - தங்கம்மா தம்பதியினரின் மகளும், காலஞ்சென்ற செல்லையா - தங்கம்மா தம்பதியினரின் மருமகளும், தில்லைநாதனின் அன்பு மனைவியும், சுகந்தினி, அரவிந்தன், முகுந்தன் ஆகியோரின் அன்புத் தாயாரும், திருநேசன், தனுஷியா, சுவேதா ஆகியோரின் அன்பு மாமியும், தீபிகா, சஷிக்கா, அவந்திகா, அஷ்விக்கா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், தர்மராஜா (அமரர்), சிதம்பரநாதன், கணேசராஜா, தங்கராணி, ஜெயபாலன் (அமரர்), புஸ்பராணி, வசந்தா ஆகியோரின் பாசமிகு சகோதரியும், தனலட்சுமி, ரங்கநாதன், சிவநாதன், குகநாதன் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.12.2022) புதன்கிழமை காலை 9 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**கல்வயல் வீதி,**
**நுணாவில் கிழக்கு,**
**சாவகச்சேரி.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

# மரண அறிவித்தல்

தோற்றம் : 20.01.1942

மறைவு: 27.12.2022



## கந்தையா சிவக்கொழுந்து (சிவம்)

**(ஓய்வுபெற்ற விவசாய உத்தியோகத்தர், மெய்கண்டார் ஆதீனம் மூன்றாம் குருமகா சந்நிதானம்)**

காரைநகர் பாலாவோடை அம்மன் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் இல 223, தேக்கம் தோட்டம் வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சிவக்கொழுந்து (சிவம்) அவர்கள் நேற்று (27.12.2022) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குழந்தைவேலு கந்தையா இலட்சுமி தம்பதிகளின் அன்புப் புதல்வரும் காலஞ்சென்றவர்களான சபாரத்தினம் இராசம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் புனிதவதியார் (ஓய்வுபெற்ற ஆசிரியர்) அவர்களின் அன்புக் கணவரும் அருந்ததி, ஆரூரன், ஆகியோரின் பாசமிகு தந்தையும் ரவீந்திரன், சசிகலா ஆகியோரின் அன்பு மாமனாரும் இலக்கியா, அனேகன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.12.2022) புதன்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் தோணிக்கல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**ஆரூரன் மகன் 0770790690**
**அருந்ததி மகள் 0775891157**

## மடப்பள்ளி வேலை செய்வதற்கு ஆள்தேவை

வல்வெட்டித்துறை நகர மத்தியில் அமைந்துள்ள சிவன் தேவஸ்தானத்திற்கு நித்திய மடப்பள்ளி வேலை செய்வதற்கு அந்தணகுலத்தை சேர்ந்தவர் தேவைப்படுகிறது. தங்குமிட வசதி உண்டு. விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம் : **077 706 7698**

(CR 38810)(3/6)

## 26 ஆம் வருட நினைவில்...

### வி.எஸ்.குணசிங்கம்

(ஓய்வுபெற்ற எழுதுவினைஞர் வன பரிபாலனத் திணைக்களம்)



தோற்றம் - 05.02.1931

மறைவு - 16.12.1996

நீங்களும் நாங்களும்
தரித்திருந்த
அந்தக் காலம் அழகானது
மிக நீண்ட இடைவெளி...
நினைவுகளால் மட்டுமே
நிரம்பி நிற்கின்றது.
ஓம் சாந்தி!!!

**3, பலாலி வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**நினைவுகளுடன்**
**மனைவி, பிள்ளைகள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 30 . 08 . 1941



உதிர்வு 09 . 12 . 2021

காரைநகர் நடுத்தெருவைப் பிறப்பிடமாகக் கொண்ட

### திருமதி சிவமணி இராசலிங்கம்

திதி: சஷ்டி

ஆண்டொன்று நீங்கினும், நீங்காது நின் நினைவுகள்.

என்றும் நீங்கா நினைவுகளுடன்

நடுத்தெரு, காரைநகர் (cs.48342) (2.6) குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

தோற்றம் 25 . 04 . 1939



மறைவு 23 . 12 . 2022

## திருமதி சின்னம்மா கிருஷ்ணமூர்த்தி

உசனைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னம்மா கிருஷ்ணமூர்த்தி அவர்கள் 23.12.2022 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் தங்கம்மா தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்ற கிருஷ்ணமூர்த்தி (நீர்வேலி) அவர்களின் அன்பு மனைவியும், நடராசா (ஓய்வுநிலை ஆசிரியர்), மற்றும் காலஞ்சென்றவர்களான இளையதம்பி, சுப்பிரமணியம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், அகல்யா (கொழும்பு), முகுந்தன்(அவுஸ்ரேலியா), நந்தகுமார் (அவுஸ்ரேலியா), ஜெயந்தன் (அவுஸ்ரேலியா) ஆகியோரின் அன்புத்தாயாரும், லோகேஸ்வரன், கிரிஜா, கனிமொழி, தமிழ்ச்செல்வி ஆகியோரின் பாசமிகு மாமியாரும், சஷ்மிகா, துளசிகா, சேயோன், ஜனகன், கவிதன், சந்தோஷி, குழலினி, வருண், பவித்திரா ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (28.12.2022) புதன்கிழமை மு.ப 9.00 மணியளவில் மலர்ச்சாலையிலிருந்து எடுத்து வரப்பட்டு அன்னாரின் இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இறுதிக்கிரியைகள் 29.12.2022 வியாழக்கிழமை மு.ப 11.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஈச்சங்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**உசன்,**
**மிருசுவில்.** (cr.38879) (2.6)

**தகவல்:**
**076 412 5181 குடும்பத்தினர்**

## விரதபூர்த்தி பூசை

வட்டுக்கோட்டை உடுக்கியவளை மகா கணபதிப் பிள்ளையார் ஆலயத்தில் விரதபூர்த்தி பூசை காலை 8 மணிக்கு இடம்பெற வுள்ளது. அதனைத் தொடர்ந்து பிள்ளையார் வட்டுக்கோட்டை அடைக்கலந் தோட்டம் முருகன் ஆலயத்துக்குச் சென்று பூசை வழிபாடுகளில் ஈடுபட்டு, அங்கேயுள்ள தீர்த்தக் கிணறில் நீராடி மீண்டும் ஆலயம் திரும்பவுள்ளார். (ம)

## இந்திய மீனவர்களுக்கு நீதிமன்றத்தால் மறியல்

யாழ்., டிசெ. 28

வடக்குக் கடற்பரப்பில் கைதான பன்னிரண்டு இந்திய மீனவர்களையும் நாளை வியாழக் கிழமை வரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிவான் நேற்று உத்தரவிட்டார்.

இந்திய மீனவர்கள் 12 பேர் கடந்த 21 ஆம் திகதி வடக்குக் கடற்பரப்பில் வைத்துக் கைதுசெய்யப் பட்டனர். அவர்கள் பருத்தித்துறை நீதி மன்றத்தில் முற்படுத் தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர். இந்த வழக்கு நேற்று மீண்டும் விசாரணைக் காக எடுத்துக்கொள் ளப்பட்டது. இதன் போதே, மேற்படி இந்திய மீனவர்களை எதிர்வரும் 29ஆம் திகதிவரை (நாளை) விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது.


(அ-ம-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## வேலுப்பிள்ளை கயிலாயபிள்ளை

(ஓய்வு பெற்ற பொது முகாமையாளர் தென்மராட்சி கிழக்கு பல நோக்கு கூட்டுறவு சங்கம். கொடிகாமம்)



அல்லாரை வடக்கு, கொடிகாமத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை கயிலாயபிள்ளை 27.12.2022 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மகனும் S.K.செல்லையா - பாறுபதிப்பிள்ளை தம்பதிகளின் பெறாமகனும் வைத்திலிங்கம் - அன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் சிவமலர் அவர்களின் அன்பு கணவரும் மங்கையற்கரசி, சாம்பசிவம் ஆகியோரின் சகோதரரும் துரைராசா(ஓய்வுநிலை விவசாய போதனாசிரியர்), வேதநாயகி, ஜெகதாம்பிகை, சுசீலாதேவி, றதிலக்ஷ்மி ஆகியோரின் மைத்துனரும் தேன்மொழி (கனடா), சுகன்யா, மதிவதனி, அம்பிகாபதி (சுவிஸ்), பகீரதன் (சுவிஸ்), இந்துமதி (ஆசிரியர்- யா/கச்சாய் ம.வி) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், யோகராசா (ஓய்வுநிலை பொறியியலாளர்-கனடா), கருணாகரன் (ஓய்வுநிலை உதவி பொறியியலாளர்-SLT), கோடீஸ்வரன் (உப அதிபர்- யா/மீசாலை விக்கி னேஸ்வரா ம.வி.), மதுராந்தகி (சுவிஸ்), ஜெயரூபதி (சுவிஸ்), கஜேந்திரன் (அதிபர்-யா/ மிருசுவில் அ.த.க. பாடசாலை), துளசி (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் தட்சாயணன்- சோபிதா, சாரங்கன், சங்கமி- லக்ஸ்மன், உத்தமி - அனுஜன், பிரியங்கா-ராஜ்குமார், பிரியதர்சன், சுமித்திரன், துளசிராம், நிலா, காவியன், மாதுரி, ஆரபி, பத்மஜன், தக்சிகா, அரண், ஓவியா ஆகியோரின் அன்பு பேரனும் பிரஹான், ரேஹன், ஆயுஷி, ஆர்யன் ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (29.12.2022) வியாழக்கிழமை முற்பகல் 09:00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனகிரியைகளுக்காக கச்சாய் எறியால் பிட்டி இந்துமயானதுக்கு எடுத்து செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

செல்லையா வீதி
அல்லாரை வடக்கு,
கொடிகாமம்.

தொடர்புகளுக்கு :
071 535 2076
077 906 9420
077 664 7463

தகவல்
குடும்பத்தினர்

(Cr. 338876) (2.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31 அரசியல்...

அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'அரசியல் தீர்வு காண்பதற்கு முன்னர் தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கவேண்டும் என்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கருத்துடன் நான் உடன்படுகின்றேன். காணி விவகாரமும், அரசியல் கைதிகள் விடயமும் அவற்றில் முக்கியம் பெறுகின்றன.

சிறைகளில் தற்போது தமிழ் அரசியல் கைதிகள் 31 பேர் உள்ளனர் என்று நீதி அமைச்சர் தெரிவித்துள்ளார். அவற்றில் குற்றம் நிரூபிக்கப்பட்ட 15 பேரையும் பாதிக்கப்பட்ட தரப்புக்களுடன் பேசி பொதுமன்னிப்பில் ஜனாதிபதியால் விரைவாக விடுவிக்கமுடியும்.

குற்றஞ்சாட்ட ஏனைய 16 பேர் மீதான வழக்கு விசாரணையைத் துரிதப்படுத்தி அவர்களையும் ஏதோவொரு வழியில் விரைந்து விடுதலைசெய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். தமிழ் அரசியல் கைதிகளை விடுதலைசெய்ய நாம் எந்த எதிர்ப்புக்களையும் வெளிப்படுத்தமாட்டோம் - என்றார். (அ-ம-22)

## வியட்நாமில்...

விமானம் மூலம் இலங்கைக்குத் திரும்பி வருகின்றனர்.

கடந்த நவம்பர் மாதம் 8ஆம் திகதி மியான்மரில் இருந்து படகு மூலம் கனடாவுக்குச்செல்ல முயன்ற இலங்கையைச் சேர்ந்த 303 பேர் பயணித்த படகு மியான்மரில் இருந்து தென் கடற்பரப்பில் மூழ்கும் நிலையில் காணப்பட்டது அங்கிருந்த ஒருவர் தொலைபேசி ஊடாக இலங்கைக் கடற்படையைத் தொடர்பு கொண்டதையடுத்து கொழும்பிலுள்ள கடல் சார் ஒருங்கிணைப்பு அவசர முகவரகம் வியட்நாம், சிங்கப்பூர், பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளின் உதவியை நாடிய நிலையில் அந்தக் கடற்பகுதியில் இருந்த ஜப்பானியக் கொடியேற்றப்பட்ட கப்பல் அவர்களை மீட்டு வியட்நாம் கடற்படையிடம் ஒப்படைத்தது. இவ்வாறு ஒப்படைக்கப்பட்டவர்கள் 3 தடுப்பு முகாம்களில் தங்க வைக்கப்பட்டிருந்தனர். இவர்களில், இலங்கைக்குத் திரும்புவதற்கு விருப்பம் தெரிவித்த 151 பேர் வியட்நாமில் இருந்து விமானம் மூலம் நேற்று இரவு திருப்பி அனுப்பப்பட்டனர். அவர்கள் இன்று காலை கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்துக்கு வரவுள்ளனர். (அ-ம)

## அமைச்சின்...

விக்கிரமசிங்கவால் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனதிபதியால் எட்டு அமைச்சரவை அமைச்சுக்களுக்குப் புதிய செயலாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். ஜனவரி மாதம் முதலாம் திகதிமுதல் நடைமுறைக்கு வரும் வகையில் இந்த நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இதன்படி, போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் புதிய செயலாளராக எம்.எம்.பி.கே.மாயாதுன்னே நியமிக்கப்பட்டுள்ளார். அவர் இதற்கு முன்னர் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளராகப் பணியாற்றியுள்ளார்.

மகளிர், சிறுவர் விவகாரங்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் செயலாளராகப் பணியாற்றிய எச்.கே.டி. டபிள்யூ.எம்.என்.பி.ஹபுஹின்ன, பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை - யாழ்ப்பாணம் மாவட்ட செயலாளராகப் பணியாற்றிய கணபதிப்பிள்ளை மகேசன் விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளராகவும், தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் மேலதிகச் செயலாளராகப் பணியாற்றிய எம்.யமுனா பெரேரா, மகளிர், சிறுவர் விவகாரங்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் செயலாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் மேலதிகச் செயலாளராகப் பணியாற்றிய எம்.எம்.நைமுதீன், முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சின் செயலாளராகவும், ஆட்பதிவுத்திணைக்களத்தின் ஆணையாளர் நாயகமாகப் பணியாற்றிய பி.பி.குணதிலக்க பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிகச் செயலாளராகப் பணியாற்றிய ஏ.எம்.பி.எம்.பி.அத்தபத்து, வணிக, வர்த்தகம் மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளராகவும், விவசாய அமைச்சின் மேலதிகச் செயலாளராகப் பணியாற்றிய ஆர்.எம்.டபிள்யூ.எஸ்.சமரதிவாகர, சுற்றுலா மற்றும் காணி அமைச்சின் செயலாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மேலும் நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சின் செயலாளர் வசந்தா பெரேரா, நீர்ப்பாசன அமைச்சின் செயலாளர் யு.டி.சி.ஜயலால், கல்வி அமைச்சின் செயலாளர் எம்.என்.ரணசிங்க ஆகியோரின் பதவிக் காலம் மேலும் ஒரு வருட காலத்துக்கு நீடிக்கப்பட்டுள்ளது. (அ-ம-20-22)

## வழிபாட்டுத்...

வழங்கப்படவுள்ளன.

மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர, நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஒவ்வொரு மத வழிபாட்டுத்தலங்களுக்கும் 5 கிலோவாட்ஸ் சூரிய சக்தி அலகு இலவசமாக வழங்கப்படும். இந்தியக் கடன் மானியத்தின் கீழ் மூன்று மாதங்களுக்குள் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும். இதேவேளை- அடுத்த சில வாரங்களுக்குத் தேவையான நிலக்கரியை இறக்குமதி செய்ய நடவடிக்கைகள் முழுமைப்படுத்தப்பட்டுள்ளன. நிலக்கரியுடன் கப்பல்கள் சில இன்னும் ஓரிரு நாள்களில் இலங்கைக்கு வரவுள்ளன - என்றார். (அ-ம)

## ஐ.தே.கவுடன்...

'மொட்டு'ச் சின்னத்தில்தான் போட்டியிட வேண்டும்' - இவ்வாறு பொதுஜன பெரமுனவின் உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள், கட்சியின் தேசிய அமைப்பாளரான பஸில் ராஜபக்சவிடம் கூறியுள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் யானைச் சின்னத்தின் கீழோ அல்லது வேறு ஏதேனும் பொதுச் சின்னத்தின் கீழோ போட்டியிட்டால் வெற்றிபெறுவது கடினம் என்று அவர்கள் மேலும் கூறியுள்ளனர்.

பெரமுனவின் உள்ளூராட்சிசபை பிரதிநிதிகளை, பத்திரமுல்லை காரியாலயத்துக்கு அழைத்து இது தொடர்பில் பஸில் பேசினார். அப்போதே அவர்கள் இந்தக் கோரிக்கையை முன்வைத்தனர் என்று தென்னிலங்கை ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. கிராம மட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சிக்குப் பெரிதாக ஆதரவு இல்லை. அந்தக் கட்சியுடன் பெரமுன சேர்ந்து போட்டியிடுவதால் தமக்கு வரவிருக்கின்ற வாக்குகள் குறைவதற்கும் தமது கட்சி உறுப்பினர்கள் வேறு பக்கம் தாவுவதற்கும் வாய்ப்புகள் உண்டு என்றும் அவர்கள் பஸிலிடம் சுட்டிக்காட்டியுள்ளனர். (அ-ம-22)

## இறால்...

மீட்கப்பட்டுள்ளார். இரணைப்பாலை 5 ஆம் வட்டாரப் பகுதியைச் சேர்ந்த 52 வயதுடைய குடும்பத்தலைவர் ஒருவரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

முல்லைத்தீவு பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவலுக்கு அமைய சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் மேற்படி சடலத்தை மீட்டு முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் ஒப்படைத்தனர். இது தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளையும் முன்னெடுத்து வருகின்றனர். (அ-ம-19)

## விபத்தில்...

சி.கணேசலிங்கம் (வயது - 76) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

கடந்த நவம்பர் மாதம் மூன்றாம் திகதி கரணவாய், மூத்த விநாயகர் ஆலயத்துக்கு அருகாமையில் இடம்பெற்ற விபத்தில் மேற்படி வயோதிபர் படுகாயமடைந்து யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டிருந்தார். இந்த நிலையில், சிகிச்சை பயனளிக்காமல் நேற்றுமுன்தினம் அவர் உயிரிழந்தார். பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி சதானந்தம் சிவராசா விசாரணைகளை மேற்கொண்டு உடற்கூற்றுப் பரிசோதனைக்கு உத்தரவிட்டார்.

விபத்தை ஏற்படுத்திய சாரதி கைதுசெய்யப்பட்டு நேற்று செவ்வாய்க்கிழமை பருத்தித்துறை நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டபோது எதிர்வரும் மூன்றாம் திகதி வரை அவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (அ-ம-26)

## வடக்கு - ...

அறிவிக்கப்படும். வடக்கு - கிழக்கை முன்னிலைப்படுத்தி அதன் செயற்பாடுகள் அமையும் என்று இடதுசாரி ஜனநாயக முன்னணியின் தலைவர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

இலங்கை மேலவை கூட்டணியின் உறுப்பினர்களுக்கிடையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற சந்திப்புத் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

உள்ளூராட்சிமன்றத் தேர்தலை பிற்போட அரசாங்கம் பல்வேறு வழிமுறைகளைத் தற்போது முன்னெடுத்துள்ளது. 2023ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 20ஆம் திகதிக்கு முன்னர் தேர்தலை நடத்த தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு ஆரம்பகட்ட நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது. தேர்தல் என்பது நாட்டு மக்களின் உரிமை அதனைப் பாதுகாப்பது மக்கள் பிரதிநிதிகளின் பொறுப்பாகும்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் விவகாரம் உயர்நீதிமன்றம் வரை சென்றுள்ளதால் தேர்தலை பிற்போட அரசாங்கம் அரசியல் சூழ்ச்சிகளை முன்னெடுக்காது என எதிர்பார்க்கிறோம். நாட்டு மக்களின் அடிப்படை உரிமையை உயர்நீதிமன்றம் பாதுகாக்கும் என்ற நம்பிக்கை முழுமையாக உள்ளது.

இலங்கை மேலவை கூட்டணி தலைமையிலான புதிய அரசியல் கூட்டணியை உருவாக்கும் ஆரம்பக்கட்ட நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. உத்தியோகபூர்வமாக அறிவிப்பு எதிர்வரும் மாதம் முதல் வாரத்தில் அறிவிக்கப்படும். எதிர்க்கட்சிகளுடன் ஆரம்பகட்ட பேச்சுக்களை முன்னெடுத்துள்ளோம்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை முன்னிலைப்படுத்தி அரசியல் நடவடிக்கைகளை முன்னெடுக்கத் தீர்மானித்துள்ளோம். தமிழ் பேசும் மக்களின் அரசியல் பிரதிநிதிகளுடன் பேச்சில் ஈடுபடத் தீர்மானித்துள்ளோம். பரந்துபட்ட அரசியல் கூட்டணியை நிச்சயம் அமைப்போம் - என்றார். (அ-ம)

## மாவை...

இருப்பதால்தான் சிங்களத் தரப்புகளால் எம்மை ஏமாற்ற முடிந்தது. எமக்குள் ஒற்றுமை இருப்பதாகக் கண்டால் அவர்களின் அணுகுமுறையில் மாற்றம் இருக்கும் என்று நம்புகின்றோம். ஆனால், இப்போதும் தமிழ்த் தரப்பில் சிலர் தனித்துப் போகவேண்டும் என்று சொல்கின்றனர். ஆனால், தமிழ்த் தேசியக் கட்சிகளை இணைத்துச் செல்லவே நாம் விரும்புகிறோம். தற்போதைய நிலையில், மாவையை தலைவராகக் கொண்டு விடயங்களை நகர்த்த முடியும். மக்களுக்காகச் செயற்படும்போது சுயநலப் போக்குகள் இருக்கக்கூடாது - என்றார்.

அண்மைக்காலமாக சாணக்கியனுடன் ஏற்பட்டுள்ள கருத்து முரண்பாடுகள் தொடர்பாக கருத்துத் தெரிவித்த விக்னேஸ்வரன், 'நான்(விக்னேஸ்வரன்) சிறுபிள்ளைத் தனமாக நடந்துகொள்கின்றேன் என்று சாணக்கியன் தெரிவித்தார் என சிலர் எனக்குச் சுட்டிக்காட்டியுள்ளனர். குறிப்பாக, நான் ஜனாதிபதிக்குக் கடிதம் எழுதியதை அவர் சிறுபிள்ளைத்தனம் என்று சொன்னாராம். ஆனால், அந்தக் கடிதத்தை நான் எழுதியதால் பல விடயங்கள் நடந்துள்ளன.

நாங்கள் கொழும்பில் இருந்து வந்தபின்னர், சுமந்திரன் தொலைபேசியில் அழைத்து 'ஜனாதிபதி கலந்துரையாடலுக்கு அழைக்கின்றார்' என்றார். அந்தக் கலந்துரையாடலில் கலந்துகொள்ள அவகாசம் போதாது. எனவே குறித்த கலந்துரையாடலில் கலந்துகொள்ள முடியவில்லை என்று ஜனாதிபதிக்குக் கடிதம் எழுதினேன். இதன் பின்னர் ஜனாதிபதியின் அலுவலகத்தில் இருந்து என்னைத் தொடர்புகொண்டனர். 'கலந்துரையாட வரலாமா? என்று சுமந்திரனே ஜனாதிபதியைக் கேட்டதாகவும் அதற்கே ரணில் சம்மதித்தார்' என்றும் ஜனாதிபதியின் அலுவலகத்தினர் எனக்குத் தெரிவித்தனர். நாம் கலந்துரையாடலுக்குச் செல்லக்கூடாது என்பதற்காகவே சுமந்திரன் இவ்வாறு செயற்பட்டிருக்கின்றார். இதையெல்லாம் விளங்காமல்தான் சாணக்கியன் கருத்துத் தெரிவித்து வருகின்றார் - என்றார். (அ-ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தத்தளிக்கும் பிலிப்பைன்ஸ்

பிலிப்பைன்ஸில் ஏற்பட்ட கடும் மழை வெள்ளத்தால் 6 பேர் உயிரிழந்துள்ளனர். 19 பேர் காணாமல் போயுள்ளனர். பிலிப்பைன்ஸின் மத்திய மற்றும் தெற்கு பிராந்தியங்களில் கிறிஸ்மஸ் தினமான கடந்த ஞாயிற்றுக் கிழமை பலத்த காற்றுடன் கடும் மழை பெய்துள்ளது. இடைவிடாது பெய்த மழையால் அங்குள்ள பல நகரங்கள் வெள்ளத்தில் மூழ்கின.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 45 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

குடியிருப்பு பகுதிகளுக்குள் வெள்ளம் புகுந்ததில் நூற்றுக்கணக்கான வீடுகள் வெள்ளத்தில் மூழ்கின. பல வீடுகள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டன.

(ஏ-இ)


## புதுவருடக் கொண்டாட்டம்
இன்று 3:1 இலவசம்

அனைத்து இன்சுவை உணவுகள்
(நியந்தனைக்குட்பட்டது)

யாழ்பாடி விடுதி, உணவகம்.
51, அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
+9421 222 6868, +94777 340 026
Youtube - Yarlpardy Hotel

## வேலை வாய்ப்பு
யோகாசன பயிற்றுனர்கள், வைத்திய உதவியாட்கள் மற்றும் தூய்மை பணியாளர்கள் தேவைப்படுகின்றனர்

Nature cure & Care
அரசடி, சாவகச்சேரி
0704828025

## வேலையாள்கள் தேவை
தச்சு வேலையில் அனுபவம் உள்ள வேலையாள்கள் தேவை. விற்பனை நிலையம் ஒன்றிற்கு விற்பனையாளர்களும் தேவை.
**கோண்டாவில், யாழ்ப்பாணம்.**
077 713 0872

## புதிய வீடு வாடகைக்கு
யாழ். கலைப் பல்கலைக்கழகத்திற்கு அருகாமையில் 2 நிமிட நடை தூரத்தில் குமாரசாமி வீதியில் 2 மாடி வீடுகள் வாடகைக்கு.
Ground Floor, 1st Floor (3 bed room, 2 Bathroom, Hall, Kitchen & Car Parking Seperate Entrance.
(CS 22447)(3/6)

074 175 8267, 077 770 8125
+16478220973 (Whatsapp)

## காணி விற்பனைக்கு
**யாழ்ப்பாணம் சாவகச்சேரிப் பகுதியில் 12 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.**

**நிலப்பரப்பு**

- சாவகச்சேரி மகளிர் கல்லூரி பிரதான வீதியுடன். 18 அடி பாதையுடன் 2 பரப்பாகவும், 3 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- பெரிய நாகதம்பிரான் கோயிலுக்கு அருகாமையில் உள்ளது.
- A-9 பிரதான வீதியில் இருந்து 700 M தூரம்.
- காய்க்கும் தென்னைகள் 72 உள்ளன.
- குடிதண்ணீர் கட்டுக் கிணற்றுடன் சிறிய வீடும் உள்ளது.
- நீர் பாய்ச்சும் வசதிகள் உள்ளன. (பைப் லைனிங்)
- விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

**தரகர் தேவையில்லை.**
பார்வையிடும் நேரம் :
காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை

தொடர்பு:- ஜெயம் 077 98 65 457
077 81 47 389


## மரண அறிவித்தல்

தோற்றம் 16 ✦ 04 ✦ 1941



மறைவு 27 ✦ 12 ✦ 2022

நயினாதீவு

### கதிரேசு சாம்பசிவம் (சோதிடர்)

நயினாதீவு 7ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் கொட்டடியை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. கதிரேசு சாம்பசிவம் நேற்று (27.12.2022) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் சிவபதமடைந்தார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இல.103, காரைநகர் வீதி,**
**வில்லூன்றிப் பிள்ளையார் கோயிலடி**
**கொட்டடி, யாழ்ப்பாணம்.**

தகவல்:-
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

மலர்வு 15 • 11 • 1944



உதிர்வு 26 • 12 • 2022

### திருமதி இராசேந்திரன் சாவித்திரிதேவி

இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் மஞ்சத்தடி, இணுவிலை வசிப்பிடமாகவும் சாயுடை, ாவிட்டபுரத்தைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசேந்திரன் சாவித்திரிதேவி 26.12.2022 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா இரத்தினம்மா தம்பதியரின் அன்புப் நல்வியும், காலஞ்சென்ற பெ.இராசேந்திரன் அவர்களின் அன்பு மனைவியும், கணேசலிங்கம், ாலஞ்சென்ற இராஜேஸ்வரி, யோகலிங்கம், தனபாக்கியம், சந்திராதேவி ஆகியோரின் பாசமிகு கோதரியும், கலாவதி (கனடா), கணேசானந்தன் (அதிபர், யா/இளவாலை மெய்கண்டான் வி), வித்தியானந்தன் (கனடா), சதானந்தன் (Co- Op Life Insurance), கலைமதி, லைநிதி ஆகியோரின் பாசமிகு தாயாரும், பாஸ்கரன் (கனடா), தமயந்தி, மனோரதி, ல்வரஞ்சினி, உமாபதிசிவம் ஆகியோரின் அன்பு மாமியாரும், பிரவீன், பிரணவன், த்தகன், கனிமொழி, தர்சிகன், சஞ்சயன், ஆரணன், கஜிந்தன், சுஜிந்தன் ஆகியோரின் ன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 30.12.2022 வெள்ளிக்கிழமை காலை 8.00 மணிக்கு யுடை மாவிட்டபுரத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக இணுவில் காரைக்கால் ந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், ண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**. கணேசானந்தன் - 077 628 4043**
**S. சதானந்தன் - 076 743 8748**

(cs48339) (2.6)

தகவல்:
குடும்பத்தினர்

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

அவனியில் தோற்றம் 01 • 11 • 1943



இறையடியில் மறைவு 15 • 12 • 2022

கடந்த 15.12.2022 வியாழக்கிழமை அன்று சிவபதப்பேறு பெற்ற எமது குடும்பத்தலைவர்

### அமரர் தம்பிஐயா நாகராஜா
(ஓய்வுபெற்ற அதிபர்)

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் நாளை (29.12.2022) வியாழக் கிழமை காலை 06.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்திய கிரியைகள் நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரது இல்லதிலும் நடைபெற்று, ஆத்மசாந்திப் பிரார்த்தனை நாளைமறுதினம் (30.12.2022) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் **நல்லூர் திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில்** நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ் விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**அருளம்பலம் வீதி,**
**நல்லூர், யாழ்ப்பாணம்.**

(cs 21353) (2.6)

**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 28.12.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.